DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Please Call me
Selva Karthigesu
Sales Representative
416-648-9757
CENTURY 21

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1317 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 2, 2021

# இவ்வருடம் களை கட்டாமற் போன கனடாவின் பிறந்த நாள் 'கனடா தினம்'

# This Year's Canada Day doesn't reach it's 'Peak'



**(ரொறென்ரோவிலிருந்து ஆர் என். லோகேந்திரலிங்கம்)**

'கனடா தின' விழாக்களில் பிரதம மந்திரி, மாகாண முதல்வர்கள் மற்றும் மத்திய மற்றும் மாகாண அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் மகிழ்ச்சியோ கலந்து கொண்டு சிறப்பிக்கும் ஒரு அரச வைபவமாகவே கொண்டாடப்படுவதுண்டு.

ஆனால், இந்த வருடத்தின் கனடா தினத்தை கொண்டாடி மகிழ்வதில் இங்குள்ள மூன்று வகையான அரசாங்கங்களுக்கோ அன்றி பல்லின மக்கள் சார்ந்த அமைப்புகளுக்கோ பெரும் ஆர்வத்தை தூண்டாமல் தலை குனிந்த நிலையில் குற்ற உணர்வுகளை மனதிற் தாங்கிய வண்ணம் கனடா தினத்தை எதிர்கொண்டது போன்ற காட்சிகளே நேற்று அதிகமாக இருந்தது. நாடு முழுவதும் ஒரே மன நிலையோடு அரசியல் தலைவர்களும் பொது மக்களும், அமைப்புக்களும் இன்றைய நாளை கழித்தது போன்ற அனுபவத்தையே எமக்குத் தந்தது.

*(தொடர்ச்சி, உள்ளே 5ம் பக்கத்தில்)*

கனடாவின் பிறந்த தினமான நேற்று யூலை முதலாம் திகதி வழையாக தேசிய அளவிலும், மாகாண அளவிலும் மாநகராட்சி மன்றங்களின் அளவிலும் விமர்சையாகக் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும்.

இவற்றை விட கனடாவில் வாழும் பல்லின மக்கள் சார்ந்த மக்கள் சார்ந்த அமைப்புக்களும் கனடா தினத்தை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதி உதவிகளை வழங்கும் வழக்கம் வருடாந்த பேணப்படும் ஒன்றாகும்.

மத்திய அரசாங்கம் சார்பில் வருடாந்தம் கொண்டாடப்பெறும்

சிறு விளம்பரங்கள் 4ம் பக்கத்தில்
Classified Advertisements On Page 4

'உதயன்' சிறு விளம்பரங்கள் மூலம் அதிக பயனடையுங்கள்.
குறைந்த கட்டணத்தில் நிறைந்த பலன்.
தற்போது புதுப் பொலிவுடன் 4ம் பக்கத்தில் பாருங்கள், படியுங்கள்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

VACCINATE BRAMPTON
GET YOUR SHOT TODAY!

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவின் பழங்குடி பிள்ளைகள் விவகாரத்தால் ரைசன் பல்கலைக் கழகம் நன்கொடையாளர்களை இழந்துள்ளது




தற்போது கனடாவில் முக்கிய விடயமாக பேசப்பட்டும் விமர்சிக்கப்பட்டும் வரும் கனடாவின் பழங்குடி பிள்ளைகள் தங்கவைக்கப்பட்ட பாடசாலைகளில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான விவகாரத்தால் ரொறன்ரோவின் பிரபல ரைசன் பல்கலைக் கழகம் பல நன்கொடையாளர்களை இழக்கும் நிலை தோன்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ரைசன் பல்கலைக் கழகத்தில் உள்ள பல துறைகளில் கட்டடக் கலைப் பீடம் மிகவும் உயர்ந்த தரத்தைக் கொண்டதாகும். இங்கு கட்டடக் கலையில் பட்டம் பெற்ற பலர் அங்கம் வகிக்கும் "கனடாவின் கட்டடக் கலைஞர்கள் சங்கம்" கூட மேற்படி பழங்குடியினரைத் தங்கவைத்து கற்பிக்கும் பாடசாலைகளை நடத்தி வந்துள்ளது. எனவே பழங்குடி பிள்ளைகளின் உடல் எச்சங்கள் மற்றும் எலும்புக் கூடுகள் ஆகியன கண்டு பிடிக்கப்பட்ட விடயத்தில் மேலதிக விபரங்களைக் கண்டறிய முயன்ற பல நன்கொடையாளர்கள், கனடாவின் கட்டடக் கலைஞர்கள் சங்கத்தின் நிர்வாகத்தில் இயங்கிய வதிவிட பாடசாலைகளிலும் இவ்வாறான படுகொலைகள் இடம்பெற்றதை அறியக்கூடியதாக இருந்துள்ளது.

எனவே அதிக கட்டடக் கலைஞர்களை உருவாக்கும் ரைசன் பல்கலைக் கழகத்திற்கு தொடர்ந்து தங்கள் நன்கொடைகளை வழங்குவதில்லை என்று நன்கொடையாளர்கள் அறிவித்துள்ளார்கள் என செய்திகள் வெளியாகியுள்ளன.

ரைசன் பல்கலைக் கழகத்திற்கு கிடைக்கும் மொத்த நன்கொடை வருவாயில் தற்போது வீழ்ச்சி ஏற்பட்டாலும் அது, பாரியதாக எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை எனவும் கடந்த ஆண்டு 2020 இல் ஆண்டில் நன்கொடையாளர்கள் அதிகரித்ததாகவும் ரைசன் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. ஆனால் அதிருப்தி அடைந்த நன்கொடையாளர்களில் சிலர் பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு கூறிய செய்தியில் கனடா நாட்டின் தேசிய அவமானத்திற்குரிய ஒரு விடயமாகப் பார்க்கப்பட வேண்டிய கனடாவின் வதிவிடப்பாடசலைகளில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தால் பல கனடியர்கள் அழுத வண்ணம் உள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

19 ஆம் நூற்றாண்டின் அமைச்சரும் கல்வியாளருமான எகெர்டன் ரைர்சன், கனடாவின் வதிவிடப் பாடசாலைகள் திட்டத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நபராக இருந்தார், அதனை நிர்வகித்து வந்தவர்கள் பழங்குடி குழந்தைகளை தங்கள் வீடுகளில் இருந்து வலுக்கட்டாயமாக கொண்டு சென்று அவர்களை கொடூரமான மற்றும் ஆபத்தான நிலைமைகளுக்கு உட்படுத்தினர். பூர்வீக வக்கீல்கள் பாடசாலைகளின் பெயரை மாற்ற வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கை விடுத்துள்ளனர், ஆனால் சமீபத்திய மாதங்களில் நாடு முழுவதும் உள்ள வதிவிடப் பாடசாலைகளில் நூற்றுக்கணக்கான பழங்குடியின குழந்தைகளின் கல்லறைகள் மற்றும் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்த விவகாரம் கனடாவை பொறுத்தளவில் ஒரு வெட்கப்படவும் கோபப்படவும் வேண்டிய ஒரு விடயடாக மாறி தீவிரமடைந்துள்ளது.

கனடாவின் பல பணக்கார குடும்பங்கள் மற்றும் நிதியாளர்களைக் கொண்ட ரியர்சனின் நன்கொடையாளர்கள், பல்கலைக்கழகங்களுக்கு திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கும் மூலதன திட்டங்களை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தக்கூடிய பணத்தை வழங்குகிறார்கள். ஒரு சில நன்கொடையாளர்கள் ரியர்சனின் பெயரைப் பற்றி தங்கள் கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

ஆனால், ரைசன் பல்கலைகழகத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்றும் தற்போது ஒரு கோரிக்கை எழுந்துள்ளது. இந்த ரைசன் என்னும் பெயரே மேற்படி பழங்குடியினரின் பிள்ளைகள் கற்று வந்த சில வதிவிடப் பாடசாலைகளின் பெயரோடும் ஒத்து காணப்பட்டது என்றும் சில நன்கொடையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், "நாங்கள் ரைசன் பல்கலைக்கழகத்தின் பெயரை மாற்றும் வரை அல்லது பல்கலைக்கழகத்தின் பெயரைத் தக்க வைத்துக் கொள்ளும் வரை அதற்கு நன்கொடைகளை வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளோம்" என்று கூறியுள்ளனர்.

STEELES PODIATRY CLINIC
கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்
ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது
WE ACCEPT
• Extended Health Care
• Private - Work Insurance
• MVA - WSIB
• ODSP - Social Service
LIST OF SERVICES
• General & Diabetic Care
• Foot Pain Treatment
• Sports Medicine
• Surgical Procedures
• Custom-Made Orthotics
• Orthopaedic Shoes
• Compression Stockings
• Ankle - Knee - Back Braces
ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).
5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

உதயன் கதிரோட்டம்

# ஒப்பற்ற நவீன கண்டுபிடிப்புக்கள் நம்மூரின் ஓலைக் குடிசைகளிலும் இடம்பெறுகின்றன

முன்னைய காலங்களில் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள் அமெரிக்கா, இங்கிலாந்து ஜேர்மனி போன்ற மேற்குலக நாடுகளில் நிகழ்ந்துள்ளன. அங்கு கூட ஏழைக் குடும்பங்களில் பிறந்து அறிவுபூர்வமாகச் சிந்தித்தவர்கள் மனித குலத்தின் நன்மைக்காக பல அரிய கருவிகளைப் படைத்துச் சென்றுள்ளனர். உதாரணமாக மின்சாரம், வானொலிப் பெட்டி தொலைபே-சி, மோட்டார் இயந்திரம் போன்றவை இவற்றுக்கு நல்ல உதாரணங்கள் ஆவன.

இற்றைக்கு கால் நூற்றாண்டுக்கு உட்பகுதியில் தென்னாசிய நாடுகளிலிருந்து மேற்குலக நாடுகளுக்குச் சென்ற ஏழை நாடுகளில் பிறந்தவர்கள் கூட தங்கள் அறிவுத் திறனால், பல அரிய கண்டு பிடிப்புக்களை எமது தந்தவண்ணம் உள்ளார்கள்.

இதற்கு மேலாக அண்மைக்காலமாக தமிழர்கள் நாங்கள் பெருமைப்படுமளவிற்கு எமது தாய் மண்ணிலும் பல மாணவ மாணவிகள் பல அரிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களின் மூலம் சிறிய கருவிகளை எமது சமூகத்திற்கு அளித்துள்ளனர். அவற்றுள் பல இலங்கை அரசின் கீழ் உள்ள தொழில் நுட்ப கழகங்களினாலும் அங்கீகரிக்கப்பெற்றுள்ளன. எமது மண்ணின் இளம் மாணவ மணிகள் தங்கள் ஏழ்மையின் மத்தியிலும் பல கல்வியிலும் கண்டுபிடிப்புக்களிலும் பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளனர்

இந்த வரிசையில் தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுள்ள இக்காலத்தில் கொரோனாவின் தாக்கத்தால் வீட்டுக்குள்ளே தங்கியிருக்கும் சில அறிவுத் தேடல் உள்ள எமது மாணவர்கள் தங்கள் சிறிய வீடுகளுக்குள்ளேயும் நவீன கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தி உலகெங்கும் அறியப்பட்டவர்களாக வலம் வருகின்றார்கள்.

நமது மண்ணின் சிறந்த கல்விக் கூடமாக அன்றும் இன்றும் என்றும் விளங்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், தரம் 10 இல் கல்வி கற்கும் நக்கீரன் மகிழினியன் என்ற 15 வயது மாணவன் வட்ஸ்அப் மற்றும் வைபர் ஆகிய செயலிகளுக்கு இணையாக நாம் பயன்படுத்தக் கூடிய புதிய செயலி ஒன்றை உருவாக்கியுள்ளார். இவரது **mSQUAD** என்ற செயலி தொலைத் தொடர்பாடல் துறையில் ஒரு முக்கியமான செயலியாக தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எமது தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு அங்கீகாரமாகவே கருதப்படுகின்றது.

சிறுவயதிலிருந்தே மென்பொருள் விஞ்ஞானியாக வரவேண்டும் என்று தனது கல்வியைத் தொடர்ந்த இந்த மாணவன் கடந்த ஒரு மாத காலமாக யாழ்ப்பாணத்தில் அமுலில் இருந்த பயணத் தடையை சிறந்த முறையில் பயன்படுத்தி வீட்டிலிருந்து இந்த புதிய செயலியை கண்டுபிடித்து அதனை பயன்பாட்டிற்குக்கு கொண்டுவந்துள்ளார் என்பதை அறியும் போது "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்" என்ற சுப்பிரமணிய பாரதியாரின் நம்பிக்கை தரும் கவிதை தான் ஞாபகத்திற்கு வருகின்றது

மிகத் துல்லியமான முறையில் படங்கள் மற்றும் வீடியோக்கள் மற்றும் தரவு-களை இதனூடா உலகின் எந்தப் பகுதியிலும் இருப்பவர்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமென்பதுடன் இந்த செயலி வேகம் அதிகம் கொண்டதாகவும் பாவனையின் மூலம் உணர்த்தியுள்ளது

எனவே இந்த நாட்களின் வெற்றியாளனாகத் திகழும் எம் 'தம்பி' நக்கீரன் மகிழினியன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை பகிர்ந்துகொள்வோமாக!

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# மன்னார் மடுமாதா ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆடித் திருவிழா



இலங்கையின் வடக்கே மன்னார் மறைமாவட்டத்தில் மடு புனித திருத்தலம் அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகள் பழைமை கொண்டது மடு அன்னையின் திருத்தலம்.

போர்த்துக்கேயரின் வருகையின் பின்னர் 1544 ஆம் ஆண்டில் மன்னாரைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் தற்போதைய மடுத் திருத்தலப் பகுதியில் ஒரு சிறிய அன்னை மரியாள் உருவத்தை வைத்து வணங்கினர். மேலும், 1583ஆம் ஆண்டில் மேலும் சில கிறிஸ்தவர்கள் ஒரு சிறிய ஆலயத்தை இவ்விடத்துக்கு அருகில் கட்டினர்.

'மண்தாய்' என்று அழைக்கப்பட்ட இதுவே மடு அன்னை மரியாவின் முதல் வீடாக இருந்தது. 1656ஆம் ஆண்டில் டச்சுக்காரர் இலங்கையில் காலனி ஆதிக்கத்தைத் தொடங்கிய போது கத்தோலிக்கரை துன்புறுத்தியதாக வரலாறு கூறுகிறது.

அப்போது புகலிடம் தேடிய 30 கத்தோலிக்க குடும்பங்கள் தங்களுடன் மடு அன்னையின் திருவுருவத்தை எடுத்துச் சென்று 1670 ஆம் ஆண்டில் மருதமடு என்ற இடத்தில் அதனை வைத்தனர். அந்த இடத்தில் தான் தற்போதைய மடு அன்னை திருத்தலம் உள்ளது.

இவ்வாறு தற்போதைய கொரோனா தொற்றின் தாக்கம் அதிகரித்த நிலை-யிலும் இவ்வாலயத்தில் வருடா வருடம் இடம்பெறும் ஆடி மாத திருவிழாவுக்கான கொடியேற்றம் கடந்த மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்றது. இம்முறை கொரோனா தொற்றின் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பக்தர்களுடன் கொடியேற்றம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நவநாள் திருப்பலிகளும் இடம்பெற்றன.

இன்று வெள்ளிக்கிழமை 2 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப்படுகின்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தலைமையில் குருநாகல் மறைமாவட்ட ஆயர் ஹரல்ட் அன்ரனி ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை (கூட்டுத் திருப்பலி) ஒப்புக் கொடுக்கின்றனர்.

திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனியும்,ஆசியும் வழங்கப்படும். நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றின் காரணமாக பக்தர்களின் வருகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு,வெளி மாவட்டங்களில் இருந்து மடு திருத்தலத்திற்கு வருகை தருவதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. நாட்டில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொரோனா தொற்றில் இருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கும் வகையில் மடுமாதாவின் அருள் வேண்டி திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட உள்ளது.

## STATEMENT FROM CONGRESS OF ABORIGINAL PEOPLES NATIONAL CHIEF RE: JULY FIRST CANADA DAY CELEBRATIONS

(OTTAWA, ON. June 30, 2021) Congress of Aboriginal Peoples (CAP) National Chief Elmer St. Pierre has echoed the voices of countless Indigenous Peoples in this country stating that this July 1st, Canada Day celebrations across Turtle Island should be cancelled. National Chief St. Pierre has stated:

"Given the recent discovery of the remains of over one thousand of our children and youth, and news of ongoing injustices that all Indigenous people have faced, and continue to face to today, what is there to celebrate? We should use Canada Day every year as a day to mourn and remember Indigenous peoples."

Many Indigenous and non-Indigenous communities are developing other alternatives to commemorate July 1st in a way that honours Indigenous Children and Youth. CAP strongly encourages anyone that is able, to participate in one of these alternatives in a safe way that is consistent with following public health regulations. We ask all of our Indigenous brothers & sisters to check in and take care of one another during these difficult days.

July 1st has been a contentious date on the calendar for some time in the Indigenous community but more so given the recent revelations that have come to light in this country. It is at this time that we would like to extend our thanks to the non-Indigenous community and allies of the Indigenous community for helping to amplify these stories and look to support in a meaningful way that will produce tangible results. On page 2 of this release, please find a number of resources to find support if you are a former residential school student in distress or have been affected by the residential school system and need help. Additionally we have provided actionable items that we encourage everyone to consider and participate in, as well as National Organizations to donate to if you are in a position to do so.

BRAMPTON FIRE EMERGENCY SERVICES
வீடு
பாதுகாப்பான
வீடு

உங்களுக்கான
ஆபத்தைக்
குறையுங்கள்



உங்களுக்குத் தெரியுமா
சமையலறை மற்றும் கேரேஜ்
நெருப்புதான் ப்ராம்ப்ட்டனில்
தீப்பற்றுவதற்கான
முக்கிய காரணங்கள் என்று?

311
bramptonfire.com
BRAMPTON

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
1.0% முதல் 1.5% வரை
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்

- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

இந்தியா செய்திகள் India News

# 'மாடர்னா' தடுப்பூசிக்கு இந்திய அரசு அனுமதி

அமெரிக்காவை சேர்ந்த மாடர்னா நிறுவனம் தயாரித்துள்ள கோவிட் தடுப்பூசிக்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவில் கோவிஷீல்டு, கோவாக்சின் ஆகிய தடுப்பூசிகள் மக்களுக்கு இலவசமாக செலுத்தப்பட்டு வருகின்றன.

3-வது தடுப்பூசியாக ரஷியாவில் தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக்-வி தடுப்பூசிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. இதன் விலை அதிகம் இருப்பதால் தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே கட்டணம் பெற்று இந்த தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

அடுத்ததாக, அமெரிக்காவின் மாடர்னா தடுப்பூசிக்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மாடர்னா நிறுவனத்தின் தடுப்பு மருந்தை இந்தியாவில் இறக்குமதி செய்து, விற்பனை செய்ய மும்பையை சேர்ந்த "சிப்லா" மருந்து நிறுவனம் டிசிஜிஐ அமைப்பிடம் விண்ணப்பித்தது. விண்ணப்பத்தில், "இந்த மருந்திற்கு அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் ஒப்புதல் வழங்கியுள்ளன. இதனால், ஆரம்ப கட்ட பரிசோதனை இல்லாமல், இந்தியாவில் இதை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். இந்த தடுப்பூசியை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு முன்னர், 100 பேருக்கு தடுப்பூசி போட்டு, அது குறித்த அறிக்கை தாக்கல் செய்யப்படும்" என சிப்லா நிறுவனம் கூறியுள்ளது.




சிப்லா நிறுவனத்தின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மத்திய அரசு, மாடர்னா தடுப்பூசிக்கு அனுமதி அளித்துள்ளது.

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

உதயனில் விளம்பரங்கள் இதயத்தில் பதிந்த ஓவியங்கள் அனேக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற பத்திரிகை உதயன்

**LOYAL PEST CONTROL**
Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.
Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
RANJAN: (416) 464-2415

**COMPUTER REPAIR**
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN: (416) 894-6244

**TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE**
All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss
முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்
Tel: (416) 754-4024
Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA
3852 Finch Avenue East Suite 302 Scarborough, ON M1T 3T9

**வேலைக்கு ஆட்கள் தேவை**
East end restaurant ஒன்றிற்கு முழு நேர வேலை ஆட்கள் உடனடியாக தேவை. Wednesday to Sunday. தங்குமிடம், உணவு, மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரவு அல்லது திங்கள் காலை drop off வசதிகள் வழங்கப்படும்.
Wages details will be discussed with the interested candidate.
Call: (416) 294-7887 for further details.

**Hiring PR & Canadian Citizens**
*Scarborough* வில் Markham / Finch சந்திப்பிற்கு அருகில் உள்ள *Factory* ஒன்றிற்கு Sewing Machine Operator மற்றும் Packing Helper உடனடியாக தேவை.
Attractive Pay. Full-time Job..
*Call: AKIN* (416) 830-8134 (9AM - 5PM)

**Italian உணவகத்திற்கு Cook தேவை**
ரொறன்ரோ நகரில் Church / Wellesley சந்திப்புக்கு அருகில் உள்ள Italian உணவகம் ஒன்றுக்கு உடனடியாக Cook ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: (416) 409-9450 அல்லது (416) 414-2241

**அலுவலக வேலை வாய்ப்பு**
ஸ்காபுறோவில் அமைந்துள்ள சிறிய அலுவலகம் ஒன்றுக்கு பகுதி நேர அலுவலக உதவியாளர் உடனடியாகத் தேவை. போதிய ஆங்கில அறிவு, கொம்பியூட்டரில் வேலை செய்த அனுபவம் மற்றும் அடிப்படை Book Keeping அனுபவம் ஆகியன அவசியம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 416 732 1608

# இவ்வருடம் களை கட்டாமற் போன கனடாவின் பிறந்த நாள் 'கனடா தினம்'

## This Year's Canada Day Doesn't Reach it's 'Peak'

- ரொறென்ரோவிலிருந்து ஆர் என். லோகேந்திரலிங்கம்



கனடாவின் பிறந்த தினமான நேற்று யூலை முதலாம் திகதி வழையாக தேசிய அளவிலும், மாகாண அளவிலும் மாநகராட்சி மன்றங்களின் அளவிலும் விமர்சையாகக் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும்.

இவற்றை விட கனடாவில் வாழும் பல்லின மக்கள் சார்ந்த மக்கள் சார்ந்த அமைப்புக்களும் கனடா தினத்தை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதி உதவிகளை வழங்கும் வழக்கம் வருடாந்த பேணப்படும் ஒன்றாகும்.

மத்திய அரசாங்கம் சார்பில் வருடாந்தம் கொண்டாடப்பெறும் "கனடா தின" விழாக்களில் பிரதம மந்திரி, மாகாண முதல்வர்கள் மற்றும் மத்திய மற்றும் மாகாண அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் மகிழ்ச்சியோ கலந்து கொண்டு சிறப்பிக்கும் ஒரு அரச வைபவமாகவே கொண்டாடப்படுவதுண்டு.


ஆனால், இந்த வருடத்தின் கனடா தினத்தை கொண்டாடி மகிழ்வதில் இங்குள்ள மூன்று வகையான அரசாங்கங்களுக்கோ அன்றி பல்லின மக்கள் சார்ந்த அமைப்புகளுக்கோ பெரும் ஆர்வத்தை தூண்டாமல் தலை குனிந்த நிலையில் குற்ற உணர்வுகளை மனதிற் தாங்கிய வண்ணம் கனடா தினத்தை எதிர்கொண்டு போன்ற காட்சிகளே நேற்று அதிகமாக இருந்தது. நாடு முழுவதும் ஒரே மன நிலையோடு அரசியல் தலைவர்களும் பொது மக்களும், அமைப்புக்களும் இன்றைய நாளை கழித்தது போன்ற அனுபவத்தையே எமக்குத் தந்தது.

ஆனால் இவ்வருடம் கனடா தினத்தன்று டொராண்டோவின் தெருக்களில் ஆயிரக்கணக்கானோர் தோடம்பழ நிற உடைகள் மற்றும் கருப்பு நிறம் கொண்ட உடைகள் ஆகியவற்றை அணிந்துகொண்டு "ஒவ்வொரு குழந்தையும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றே" என்ற தலைப்பில் இடம்பெற்ற நடைப்பயணத்திலும் பங்கேற்றார்கள். இந்த அணிவகுப்பின் போது அனைவரும் "ஒவ்வொரு குழந்தையும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றே" என்பதை கோசங்களாக உரத்து சொல்லிய வண்ணம் நடந்தார்கள்.

கனடா தின கொண்டாட்டங்களுக்குப் பதிலாக 1ம் திகதி வியாழக்கிழமை, பல நகரங்களில் கனடா தின துக்கம் அனுஸ்டிக்கும் நிகழ்வுகளும் ஊர்வலங்களும் இடம்பெற்றுள்ளதை நாம் உணரக் கூடியதாக இருந்தது.

இதற்குக் காரணம் கனடிய மக்களில் அதிகமானவர்களுக்கு தெரிந்த ஒரு துன்பகரமான விடயமே என்பதை நாம் இங்கு பதிவு செய்கின்றபோது, எம் விரல்களில் சிறிதளவில் நடுக்கம் ஏற்படுவதை உணர்கின்றோம்.

அண்மைக்காலத்தில் கனடிய பாராளுமன்றத்திலும் மாகாணப் பாராளுமன்றங்களிலும் ஒரு முதன்மையான விடயமாக பேசப்பட்டும் அனுதாபதங்களைப் பகிர்ந்த வண்ணமும் உள்ளது விடயம், கனடாவின் பழங்குடி மக்கள் சார்ந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறு குழந்தைகள் மற்றும் சிறுவர் சிறுமியர்கள் ஆகியோருக்கு நேர்ந்த அவலம் நிறைந்த சம்பவங்களே ஆகும்.



இன்றிலிருந்து பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக, கனடாவின் அரசாங்கங்களாலும் அப்போது பதவியிலிருந்த ஆளுனர் நாயகங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட "அங்கீகாரம் பெற்ற ஒரு அரசின் நடைமுறைகளில் ஒன்று" என்ற வகையில் பழங்குடி மக்கள் சார்ந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறு குழந்தைகள் மற்றும் சிறுவர் சிறுமியர்கள் ஆகியோரை அவர்களின் குடும்பங்களிலிருந்து பிரித்து அவர்களை கிறிஸ்தவப் பாதிரிகளினால் நிர்வகிக்கப்பட்டு வந்த "வதிவிடப் பாடசாலைகளில்" தங்க வைத்து கல்வி போதிப்பது போன்ற திட்டம் தொடரப்பட்டு வந்துள்ளது. எமக்கு கிடைத்த தகவல்களின் படி 1996ம் ஆண்டு வரையும் கனடாவின் அரசாங்கங்களுக்கும் ஆசிஎம்பி என்னும் கனடாவின் மத்திய அரசு சார்ந்த தேசிய காவல் துறைக்கம் நன்கு அறியப்பட்ட முறையிலேயே இந்த திட்டம் தொடரப்பட்டு வந்ததாகவும், அதன் காரணமாக பிள்ளைகள் சார்ந்த குடும்பங்கள் தங்கள் பிள்ளைச் செல்வங்களை பிரிந்த பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய முடியாதவர்களாகவும் இருந்துள்ளார்கள் என்பதும் இங்கு முக்கியமான ஒரு விடயமாகும்.

ஆனால் மிக அண்மையில் கனாடவின் பழங்குடியினர் சார்ந்த அமைப்புக்கள் பல ஒன்று சேர்ந்து நடத்திய தேடுதல்களின் விளைவாக இவ்வாறு தங்கள் இனம் சார்ந்த குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டிருந்த குழந்தைகள் மற்றும் சிறுவர் சிறுமியர்கள் ஆகியோர் பலாத்காரமாக கொலை செய்யப்பட்டு வதிவிடப் பாடசாலைகளுக்கு அருகில் உள்ள இடங்களிலும் அந்த பாடசாலைகளுக்கு தொடர்புடைய தேவாலயங்களின் வளாகங்களிலும் புதைக்கப்பட்டிருந்ததை கண்டு பிடித்தனர். அங்கு அவர்கள் கண்டது, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் தங்கள் இன குழந்தைகள் மற்றும் சிறுவர் சிறுமியர்கள் ஆகியோரின் உடல் எச்சங்கள் மற்றும் எலும்புக் கூடுகளும் ஆகும்.

இவ்வாறு அந்த வதிவிடப் பாடசாலைகளின் நிர்வாகத்தில் தொடர்புடைய கிறிஸ்த்தவப் பாதிரிகள் கொலை செய்யும் அளவிற்கு சென்றதற்கு, கனடிய அரசின் அங்கீகாரமும் அறிதலும் ஓரளவிற்கு இருந்தது என்றே சொல்லப்படுகின்றது.

கனடாவின் பழங்குடியினர் என்ற இனத்தின் கலை கலாச்சாரப் பண்பாட்டுக் கோலங்களை அழித்து கடனாவில் பழங்குடியினர் என்ற இனக் குழுமத்தை முற்றாக அழிக்கும் ஒரு நோக்கமும் இந்த பாதகமான செயல்களுக்குப் பின்னால் இருந்தது என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு தங்கள் இனக் குழுமத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளம் வயதினரை கனடாவின் பல மாகாணங்களில் அரசாங்கத்தினதும் மத்திய காவல்துறையினரின் ஆதரவோடும் அவர்கள் குடும்பங்களிலிருந்து பிரித்து, அவர்களை துன்புறுத்தியும் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கியும் கொலை செய்தும் அரங்கேற்றிய கொடுமைகளுக்காகவே, இவ்வருடம், கனடாவின் பழங்குடியினர் மாத்திரமல்ல, அரசியல் தலைவர்களும் சமூக அமைப்புக்களும் "கனடா தினத்தை" கொண்டாட முன்வரவில்லை.

நேற்று வியாழக்கிழமையன்று கனடா தின கொண்டாட்டங்களுக்குப் பதிலாக கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட இளம் வயதினரின் குடும்பங்களுக்காகவும் இந்த பாதகச் செயல்களிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களுக்கு ஆதரவளிப்பதற்காகவும், கனடா முழுவதும் உள்ள "வதிவிடப் பாடசாலைகளில் கிறிஸ்தவப் பாதிரிகளினால் உயிர்ச் சேதம் செய்யப்பட்ட 2,000 க்கும் மேற்பட்ட பழங்குடி குழந்தைகளின் நினைவாக பல நகரங்களில் மக்கள் கூடி அணிவகுக்கள் இடம்பெற்றன.

ரொறன்ரோ மாநகரில் அமைந்துள்ள டொராண்டோ மாநகர சபைத்திடலில் இந்த அணிவகுப்பில் கனடாவின் பழங்குடிகள் இனம் சார்ந்த மக்களும் பல்லின மக்களும் ஒன்றாகக் கூடி இந்த ஊர்வலத்திற்கு வலுச் சேர்த்தனர்.

பழங்குடி மக்களும் அவர்களின் நண்பர்களும் ஒன்றிணைந்ததால் டிரம்ஸ், மற்றும் பழங்குடியினர் சார்ந்த கலாச்சார நிகழ்வுகளும் நடனங்களும் இந்த அணிவகுப்பில் இடம்பெற்றன.

நேற்றைய தினம் இந்த கட்டுரையை எழுதவென ஆர்வத்துடன் கணணியின் முன்பாக குந்திய வேளையில் இதயம் படபடத்தது. கண்களிலிருந்து எப்போது வெளியேறும் என்று காத்திருக்கும் கண்ணீரையும் "கொஞ்சம் காத்திரு" என்று சொல்லிவிட்டு இந்த பந்திகளை எழுதிக் குவிக்கவென ஒரு ஆர்வம், ஆவேசம் என்று கூடச் சொல்லலாம்.

கனடாவில் யூலை 1ம் திகதி பிறந்தது ஆனால் கனடாவின் பிறந்த தினத்தை கொண்டாடும் மனநிலை பலருக்கு இருக்கவில்லை. யூலை மாதம் என்பது ஈழத்தமிழர்களுக்கும் ஒரு கொடிய நாள் என்று முத்திரை குத்தப்பட்ட ஒரு மாதம். யூலைப் படுகொலைகளை இலங்கை அரசும் இலங்கை இராணுவமும் தமிழ் மக்களுக்கு பரிசளித்த மாதமிது.

கனடாவில் யூலை முதல் நாள் கனடாவின் பிறந்த நாளை இந்த அற்புதமான தேசத்து மக்கள் ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருவது ஒரு பாரம்பரிய வழக்கமாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் இந்த வருடத்தின் யூலை முதலாம் திகதியானது கனடாவின் பிரதமர்கள் மட்டுமல்ல, கனடாவின் ஆளுனர் நாயகம் என்ற பதவியை வகித்த பல பிரமுகர்களுக்கும் ஒரு "கரி" நாளாக மாறிவிட்டது என்றே கூற வேண்டும்.



இவ்வருடத்தில் என்ன நடந்திருக்கின்றது என்பதை கனடாவில் வாழும் எம்மவர்களுக்கு சொல்லித்தான் தெரிய வேண்டும் அல்ல.

ஆனால் தற்போது தலை குனிந்து நிற்கின்றது கனடிய தேசம். கனடாவின் சிறந்த பிரதமர் என்ற நற்பெயரைப் பெற்ற பியர் ட்ரூடோ அவர்களின் புதல்வர் தற்போதைய கனடாவின் பிரதமராக பிரகாசிக்கின்ற ஜஸ்டின் ட்ரூடோ கூட "இவவருடத்தின் "கனடா தினத்தில்" கனடிய தேசம் எங்கும் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க வேண்டும்" என்ற வேண்டுகோளை விடுத்துள்ளதை நினைத்துப் பார்த்தோம்.

இப்போது குறிக்கப்படாத 2,000க்கும் மேற்பட்ட வதிவிடப் பாடசாலைகளின் மாணவர்களின் கல்லறைகள் மற்றும் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது பல கனேடியர்கள் மற்றும் கனடாவின் முன்னாள் கவர்னர்கள் ஜெனரல் தங்கள் பதவிக் காலத்தில் என்ன செய்துகொண்டு இருந்தார்கள் என்பதே தற்போதைய கேள்விகளாக உள்ளன என்கிறார்கள் பழங்குடி இன மக்கள் சார்ந்த பிரதான அமைப்புக்கள்.

இதேவேளை கடனாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் இந்த வாரம் கனடாவின் புதிய கவர்னர் ஜெனரலாக (ஆளுனர் நாயகம் பதவிக்கு) ஒரு பழங்குடி சார்ந்த தகுதி வாய்ந்த ஒருவரை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் அடுத்த வாரம் இந்த அறிவிப்பு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது அதற்கு அதிக வாய்ப்புள்ளது.

கனடாவின் காலனித்துவ வரலாற்றின் உண்மையையும், பழங்குடிகளான கனேடியர்களுக்கு அது அளித்த வாக்குறுதிகள் மறுக்கப்பட்டதையும் இறுதியாக ஒப்புக் கொள்ளுமாறு அனைத்து கனேடியர்களிடமும் வருத்தம், கோபம், விரக்தி ஆகியன அடங்கிய ஒரு வேண்டுகோளை விடுக்க வேண்டும். மேலும், நாங்கள் ஒரு நாடாக இந்த கொடுமைகளுக்காக பொறுப்பேற்கப் போகிறோம் என்றால், அதற்கு நாம் என்ன பொறுப்பு என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்," இவ்வாறு தெரிவித்துள்ளார் கனடாவின் 26வது கவர்னர் ஜெனரலாக பணியாற்றியவரும் ஹாங்காங்கில் பிறந்தவரும் ஒரு அகதியாக கனடாவிற்கு வந்தவரும் அட்ரியன் கிளார்க்சன் அவர்கள். இவர் பதவி வகித்த 1999-2005 காலப்பகுதியில் இவ்வாறான கொடுமைகள் குறைந்திருந்தன என்றும் இவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "பழங்குடியினரின் இளைய தலைமுறையினர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டது 20,000 30,000 இறப்புகள் என்றால், அதற்கான பொறுப்பை நாம் ஏற்க வேண்டும். நாங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், ஒரு ஆரோக்கியமான தேசமாக கனடாவை நாம் பின்பற்ற முடியாது, அல்லது நம்மை நாம் ஒவ்வொருவரும் நேருக்கு நேர் எம் முகங்களைப் பார்க்க முடியாது அதற்குப் பதிலாக தலை குனிந்தே இருக்க வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்" என்றார்.

# உலகளவில் இலங்கை பெற்றுள்ள அபகீர்த்தி

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



ஆட்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்படுவதில் உலகளவில் இலங்கை இரண்டாவது இடத்திலுள்ளது என்று ஐக்கிய நாடுள் செயற்குழுவின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஒரு காலத்தில் வெள்ளை வாகனம் என்றாலே குலை நடுங்கும் என்றிருந்தது.

யார், எப்போது, எதற்காக, எப்படிக் கடத்தப்படுவார்கள், பின்னர் என்னவாகும் என்பதையெல்லாம் எண்ணி பார்க்க முடியாது காலம் நிலவியது. பின்னர் அந்த கலாச்சாரம் குறைவதற்கான அறிகுறிகள் காணப்பட்டாலும் அதை ஒழித்து மக்களின் நம்பிக்கையை அடுத்தடுத்து வந்த அரசுகளால் பெற முடியவில்லை.

இப்போது மீண்டும் அந்த அச்சம் மீண்டும் தலை தூக்குகிறது. நாட்டில் ஏற்கனவே போர்க்காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த தொடர் போராட்டம் நடைபெறுகிறது. அவர்களில் ஒருவர் கூட இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதற்காக ஒரு அலுவலகம், அதன் தலைவராக சர்ச்சைக்குரிய நபர், ஐந்து அலுவலகங்கள் என அவலங்கள். ஆனால் விளைவு என்னவோ பூஜ்ஜியம் தான்.

அவ்வகையில் முட்டைக்கு வெள்ளையடிக்கும் பல அமைப்புகள், ஆணையங்கள், ஆணைக் குழுக்கள், அதிகார சபைகள் இலங்கையில் உள்ளன.

பித்தளைக்கும், வெற்றிலைக்கும் அமைச்சர்கள் இருக்கும் போது இப்படி பல அமைப்புகள் இருந்தால் தவறா என்ன?

இந்நிலையில் இரவு வேளைகளில் சிவில் உடையில் வரும் குழுக்கள், சமூக செயற்பாட்டாளர்களை கடத்திச் செல்வது, நாட்டில் மீண்டும் காணாமல் போகச் செய்யும் செயற்பாட்டின் ஆரம்பம் என கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுவதற்கு எதிராக போராடும் இலங்கையின் முன்னணி அமைப்பு ஒன்று எச்சரித்துள்ளது.

ஜூன் 25 ஆம் திகதி, சுமார் 20 பேர் கொண்ட குழு, எவ்வித காரணமும் இன்றி, பொதுமக்கள் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் ஏற்பாட்டாளர், அசேல சம்பத்தை கடத்திச் சென்றதாக, அவரது உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்காக உரையாற்றும்போது, நடந்த கடத்தல் தொடர்பில் சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவிய நிலையில், அவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.



சிவில் உடையில் வந்த குற்றப்புலனாய்வு அதிகாரிகளும், சீருடையில் இருந்த பிலியந்தலை பொலிஸின் அதிகாரிகளும் இணைந்து, அசேல சம்பத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய சட்டப்படி அவரை கைது செய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்திருந்தார்.

அசேல சம்பத்தின் குடும்பத்தின் தகவலுக்கு அமைய இது ஒரு கடத்தல் எனவும், எனினும் பொலிஸாரின் உத்தியோகபூர்வ கூற்றின்படி இது சட்டப்பூர்வ கைது எனவும், காணாமல் போனோர் குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

குற்றப்புலனாய்வு பிரிவினால் கடத்தப்பட்ட சிவில் சமூக ஆர்வலர் அசேல சம்பத் ஜூன் 26ஆம் திகதி கொழும்பு மேலதிக நீதவானினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

காணாமல் போனவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழுவின் புள்ளிவிபரங்களுக்கு அமைய, காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பில் இலங்கை உலகில் இரண்டாவது இடத்தில் காணப்படுகின்ற நிலையில், அசேல சம்பத் கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோது, காணாமல் போனவர்களின் குடும்பங்கள் அதிர்ச்சியும், அச்சமும் அடைந்ததாக, மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் காணாமல் போனோர் குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றியத்தின் தலைவருமான பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

என்ன காரணம்?

*1989 ஆம் ஆண்டு தெற்கில் நடந்த பயங்கரவாதம் மற்றும் முப்பது* ஆண்டுகால யுத்தத்தின் அனுபவத்தில், கடத்தல்கள், காணாமல் போவதற்கான முதல் படியாகும் என மூத்த மனித உரிமை ஆர்வலர் பிரிட்டோ பெர்னாண்டோ சுட்டிக்காட்டுகிறார்.

"இராணுவம் மற்றும் பொலிஸார் என அடையாளப்படுத்தப்பட்டவர்களால் கடத்தப்பட்டவர்கள் இரகசியமாக தடுத்து வைக்கப்பட்டு பின்னர் கொலைகள் வெளியாகாமல், எந்தவொரு தடயமும் இல்லாது காணாமல் ஆக்கப்பட்டனர். எனினும் கைது செய்ததை ஒப்புக்கொள்ளவும் இல்லை." என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அசேல சம்பத்தின் குடும்பம் இன்று காணாமல் ஆக்கப்படுவதற்கான முதல் கட்டத்தை எதிர்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நபர் தற்காலிமாவேனும் காணாமல் போவது அவர்களின் உறவினர்களுக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டுகிறார்.

"அவர் கடத்தப்பட்டதாக அவரது குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவே நினைப்பார்கள். ஒரு கணமேனும் காணாமல் ஆக்கப்பட்டால் அவர்களது உறவினர்களுக்கு அது கடுமையான உளவியல் அதிர்ச்சியாகும்".

இரவு நேர கைதுகள்

கொடூரமான குற்றவாளிகளாக கருதி இந்த கைதுகள் ஏன் இரவில் இடம்பெறுகின்றன என கேள்வி எழுப்பியுள்ள காணாமல் போனோர் குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றியம், ஜெனரல் சரத் பொன்சேகா, முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மற்றும் அசேல சம்பத் ஆகியோர் இரவில் கைது செய்யப்பட்ட விடயத்தையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சொய்சா, சட்டத்தரணி லியனாராச்சி ஆகியோர் 1989 இல் இவ்வாறு கைது செய்யப்பட்டதாகவும் பின்னர் எந்த தகவலும் இல்லாமல் அவர்கள் இன்றுரை காணாமல் போயுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




ரிச்சர்டின் உடல் பின்னர் மொரட்டு கொரலவெல்ல கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுபோன்ற பல சம்பவங்கள் வடக்கு மற்றும் கிழக்கிலும் பதிவாகியுள்ளதாக காணாமல் போனோர் குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றியம் சுட்டிக்காட்டுகிறது.

நாட்டில் மீண்டும் காணாமல் போகச் செய்யும் செயற்பாட்டின் ஆரம்பமே இதுவென சுட்டிக்காட்டியுள்ள, காணாமல் போனோர் குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றியம், இது சட்டரீதியாக இடம்பெற்ற கைது என ஏற்றுக்கொண்டுள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண போன்றவர்கள், இவ்வாறான கைதுகளை நிராகரிப்பதற்கு எடுக்கும் காலத்தின் அளவானது, சமூகத்தில் இத்தகைய கடத்தல்கள் குறித்து பொதுமக்கள் வெளிக்காட்டும் எதிர்ப்பின் அடிப்படையிலேயே தங்கியுள்ளதாக பிரிட்டோ பெர்ணான்டோ குறிப்பிட்டுள்ளார்.

"கடந்த காலத்தில் நாட்டின் பல வீடுகளில் கேட்ட கடத்தல்கள் குறித்து புலம்பல்கள் இன்று அசேல சம்பத்தின் புதல்வியிடம் ஒரு கணமாவது கேட்க முடிந்தது. எதிர்காலத்தில் எமது வீட்டிலும் இந்த புலம்பல் கேட்மாமல் தடுப்பது நம் அனைவரின் பொறுப்பாகும்".

பலருக்கு கிடைக்காத அதிர்ஷ்டத்தைப் பெற்ற அசேல சம்பத், நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட விடயத்தை வலியுறுத்தியுள்ள காணாமல் போனோர் குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றியம் ஆனால் கடத்தல் குறைந்தபட்சம் ஒரு கணமாவது இடம்பெற்றது என்பதை மறந்துவிடக் கூடாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகள் அமைப்புகள் இது மீண்டும் "காணாமல் ஆக்கப்படுவதற்கான ஆரம்பம்" என்று கூறி அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

வாய் மூடி மௌனிகளாக இருந்தால் மட்டுமே இலங்கையில் சீவிக்க முடியும் என்கிற அவப்பெயர் நிலவுகிறது என்பதை அலரி மாளிகையில் உள்ளவர்கள் உணர்ந் தாகத் தெரியவில்லை.

ஒரு ஜனநாயக நாட்டில் எதிர்ப்புக் குரல் அல்லது மாற்று கருத்து என்பதே அந்த ஜனநாயகத்திற்கு வலு சேர்க்கும். ஆனால் இலங்கை ஜனநாயக நாடா என்று கேட்டால் அதற்கு என்னிடம் பதிலில்லை.



# "பாலியல் துஷ்பிரயோகம் பௌத்தத்தில் தடை செய்யப்பட்டுள்ளது"



**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்- லண்டன்)**

உலகளவில் பௌத்தர்களின் ஒரு முன்னணி ஆன்மீகத் தலைவராக மதிக்கப்படும் தலாய் லாமா டச்சு தொலைக்காட்சி நிறுவனமான என் ஓ எஸ்ஸுக்கு அளித்த பேட்டி ஒன்றில் மிக முக்கியமான விஷயம் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார்.

பௌத்தம் மற்றும் புத்தர் குறித்த பல கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். அதில் டச்சு மக்கள் மிகவும் ரசிக்கும் பாலியல் விஷயங்கள் தொடர்பான கேள்விகளும் இருந்தன. ஆம்ஸ்டர்டாமுக்கு சென்று வந்தவர்களுக்கு அங்குள்ள கலாச்சாரம் மற்றும் "இதர விஷயங்கள்" தெரிந்திருக்கும்.

ஆனால் தலாய் லாமா பேசியதோ அல்லது அவரிடம் கேட்கப்பட்டதோ இந்த ஆம்ஸ்டர்டாம் விஷயமில்லை. அவரிடம் பாலியல் தொடர்பில் புத்தர் கூறியுள்ளது பற்றி கேட்கப்பட்டது.

"பௌத்தத்தை பின்பற்றும் பல நாடுகளில் பாலியல் துஷ்பிரயோகம் நடைபெறுகிறது. பாலியல் இச்சைகளுக்கு ஈடுகொடுக்க வேண்டும் என்பது ஒரு ஆயுதமாகவே பயன்படுத்தப்படுகிறதே"?

"பாலியல் துஷ்பிரயோகங்கள், சீண்டல்கள் அல்லது பலாத்காரங்களைச் செய்வோர் புத்தரின் உபதேசங்களை மதிப்பதில்லை அல்லது அதைப் பற்றி கவலைப்படுவதில்லை என்றே கருத வேண்டும். மேலும் புத்தரின் உபதேசங்கள் மற்றும் பௌத்த கோட்பாடுகளின் படி எவ்வகையிலும் பாலியல் சேட்டைகள், துன்புறுத்தல்கள், சுரண்டல்கள் ஆகியவை தடை செய்யப்பட்டவையாகும்".

என் ஓ எஸ் தொலைக்காட்சியின் இந்த கேள்விக்கு பல காரணங்கள் உள்ளன. பௌத்தத்தை பின்பற்றும் பல நாடுகளில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிக்கடி எழுந்தன. குறிப்பாக பர்மா, வியட்நாம், தாய்லாந்து போன்ற நாடுகளில் இராணுவத்தினர் பாலியல் வன்முறை அல்லது துஷ்பிரயோகத்தை ஒரு ஆயுதமாகவே பயன்படுத்தி வந்தனர்.

இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. இறுதிக்கட்ட போரின் போதும் அதற்குப் பின்னரும் நடைபெற்ற சம்பவங்களும் உலகறிந்தவை. இசைப்பிரியா.........

தலாய் லாமா கூறியதை ஆட்சியாளர் ஆழமாக சிந்திக்க வேண்டும். இந்தக் கட்டுரை மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதற்கில்லை.

பாலியல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் எழும் போது பெரும்பாலான நாடுகளும் அமைப்புகளும் அதை மிகவும் தீவிரமாக கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்கும் அல்லது எடுப்பதாக வாக்குறுதியாவது அளிக்கும். இந்தியா போன்ற நாடுகள் பாலியல் பலாத்காரங்களை செய்பவர்களை தண்டிக்க புதிய சட்டத்தையே இயற்றியது. இதுவொன்றும் புதிதல்ல.

ஆனால் இலங்கையோ இது குறித்து கவலைப்படுவதாகவோ அல்லது கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை. இப்போது தொடர்ச்சியாக பல ஊடகவியலாளர்கள் தாங்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானதை தைரியமாகக் கூற முன்வந்துள்ளனர். நாட்டின் முன்னணி ஊடக நிறுவனங்களில் பெண் ஊடகவியலாளர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளது இலங்கையில் ஊடக சுதந்திரம் குறித்த பெரிய கேள்வியை எழுப்பியுள்ளது.

ஏற்கனவே எல்லைகள் இல்லாத ஊடகவியலாளர்கள் அமைப்பு ஆர் எஸ் எ.ப் உலகளவிலான ஊடக சுதந்திரப் பட்டியலில் இலங்கையை மிகவும் கீழே வைத்துள்ளது. அது இப்போது மேலும் வீழ்ச்சியடையும்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டு செய்தியாளர் சங்கத்தினர் இது குறித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டனர்.

ஆனால் இலங்கை அரசோ இது குறித்து விசாரணை நடத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று கூறியது ஆச்சரியம் மட்டுமல்ல அதிர்ச்சியாகவும் இருந்தது. அமைச்சரவை பேச்சாளரும் ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கூறிய காரணம் விசித்திரமானது.

"இதுவரை யாரும் புகார் அளிக்கவில்லை. அப்படி அளித்தல் அது குறித்து விசாரிப்பது பரிசீலிக்கப்படும்"

இது தனியொருவர் வைத்த குற்றச்சாட்டு அல்ல, பல ஊடக நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் கூறியுள்ளனர். இப்படியான தொடர் குற்றச்சாட்டுக்கள் எழுந்தவுடன், அரசு தாமாக முன்வந்து விசாரணையைத் தொடங்கியிருக்க வேண்டும். அதுவே முறை, தர்மம். ஆனால் ஆதாரத்துடன் புகாரளித்தால் நடவடிக்கை குறித்து பரிசீலிக்கப்படும் என்று அவர் கூறியிருப்பது வெட்கக் கேடானது. அதாவது பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆதாரமும் அதிகாரபூர்வமான புகாரையும் அரசு கோருகிறது.

அரசில் அமைச்சர்களாக இருப்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வளர்ந்த பிள்ளைகள் இருக்கக் கூடும். அவ்வகையில் தமது பிள்ளைகளை எப்படி பாதுகாப்பார்களோ அப்படி நாட்டிலுள்ள இளையோர்களை தமது மகன் அல்லது மகள் போன்று கவனிக்க வேண்டும் ராஜ நீதி.

இலங்கையில் நாளாந்த பத்திரிகை ஒன்றில் பணிபுரியும் தான், தொழில்முறை சக ஆண் ஊழியரால் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக நேரிடும் என்று அச்சுறுத்தப்பட்டதாக ஊடகவியலாளர் சாரா கெல்லபத ட்விட்டர் பதிவு ஒன்றில் தெரிவித்திருந்தார்.

முன்னாள் அமெரிக்கத் திரைப்படத் தயாரிப்பாளர் ஹார்வி வின்ஸ்டைன் செய்த பாலியல் குற்றங்களின் வெளிப்பாட்டுடன் 2017ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தொடங்கிய #MeToo பிரச்சாரத்தைப் போலவே, சாரா கெல்லபத ட்விட்டர் பதிவு, இலங்கையில் மேலும் பல பெண்களை தங்கள் அனுபவங்களை பகிரங்கப்படுத்தத் தூண்டியுள்ளது.

இதற்கமைய இதுவரை, பல பெண்கள் பணியிடங்களில் எதிர்நோக்கிய பாலில் தொல்லைகள் குறித்த பதிவுகளை பகிர்ந்துள்ளனர்.

2010-17 ஆம் ஆண்டுகளில் ஒரு பத்திரிகையில் பணியாற்றியபோது தான் அனுபவித்த துன்புறுத்தல் குறித்து சாரா வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து, பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கையின் சமூக ஊடகங்களில் தொடர்ச்சியாக வெளிவர தொடங்கியுள்ளன.

இந்த ட்விட்டைத் தொடர்ந்து, இலங்கையில் ஊடக நிறுவனம் ஒன்றில் பயிற்சி பெற்ற அமெரிக்க ஊடகவியலாளர் ஜோர்டான் நரின், இலங்கை அரசின், "டெய்லி நியூஸ்" பத்திரிகையில் பயிற்சி பெற்றபோது சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவரால் தான் தொடர்ச்சியாக பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானதாக ட்வீட் செய்துள்ளார்.

"இலங்கை இதுவரை கண்டிராத சிறந்த ஊடகவியலாளர் அவர். அவரிடமிருந்து கற்றுக்கொள்ள எனக்கு வாய்ப்பு கிடைக்கும் வரை நான் பொறுமையாக இருந்தேன். ஆனால் அவர் சுமார் இரண்டு மாதங்கள் என்னைப் பயன்படுத்திக் கொண்டார், பின்னர் அவர் என்னை நோக்கி கூச்சலிட ஆரம்பித்தார். தொடர்ந்து என்னைத் தொந்தரவு செய்தார், எப்போதும் என்னைத் தொடுவார்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதியில் அவர் தலைமை ஆசிரியரிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து, குறித்த ஊடகவியலாளர் பதவி விலகும் நிலை ஏற்பட்டது.

பின்னர் அவர் டெய்லி மிரரில் இணைந்தார், இப்போது அவர் சட்டம் பயின்று வருவதாக, சமூக ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டுள்ள, ஊடகவியலாளர் சஹ்லா இல்ஹாம், இப்போது வெளியாகாத "பிரபல பத்திரிகை ஆசிரியர்" ஒருவரால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானதாகவும், தன்னை அமைதியாக இருக்குமாறு, தனது குடும்பத்தினருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

துஷ்பிரயோகத்தை விவரிக்கும் மற்றொரு ஊடகவியலாளர் காவிந்தியா தென்னகோன், தான் 15 வயது மாணவியாக சுயாதீன தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற போது ஒரு ஒப்பனை கலைஞர் தன்னை தேவையில்லாமல் தொட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து நிகழ்ச்சி பணிப்பாளரிடம் முறைப்பாடு அளித்த பின்னர், கலைஞர் தன்னை நெருங்குவதை தவிர்த்து கொண்டதாகவும், எனினும் அவர் தொடர்ந்து அந்த நிறுவனத்தில் பணிபுரிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் எம்டிவி தொலைக்காட்சியில் இணைந்து பணியாற்றியபோது, சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் தன்னை முத்தமிடும்படி கட்டாயப்படுத்த முயன்றது குறித்தும், அதன் பின்னர் பல மாதங்கள் தொடர்ந்து அவருடன் இணைந்து பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் குறித்தும் அவர் கூறியிருந்தார்.

பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானவர்களில், பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி நிலையங்களின் நடுத்தர வர்க்க ஊடகவியலாளர்களும், பின்னர் அரசியல் வாழ்க்கைக்கு திரும்பிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களும் அடங்குவர்.

பலர் தாங்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள் குறித்து தெரிவித்ததை அடுத்து, இலங்கையின் வெளிநாட்டு ஊடகவியலலாளர்களள் சங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகள் விரைவாக விசாரிக்கப்பட வேண்டுமெனவும், மீண்டும் இவ்வாறு ஏற்படுவதை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஊடகங்களையும் கேட்டுக்கொள்வதாக அதில் குறிப்பிட்டிருந்தது.

"ஒரு சமூகம் என்ற வகையில், பணியிடங்களில் உள்ள எங்கள் சக ஊழியர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் சமத்துவம் இருப்பதை உறுதிசெய்வதற்கான பொறுப்பு எங்களுக்கு காணப்படுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளது".

இலங்கை ஊடகங்களில் சில பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களை எதிர்நோக்கிய விடயம் ஆங்கில மொழி ஊடக நிறுவனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை என நாட்டின் முன்னணி ஊடக அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

ஆங்கில மொழி ஊடகங்களில் பணியாற்றும்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்த சம்பவங்கள் குறித்து சமூக ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தாலும், சில சிங்கள மற்றும் தமிழ் மொழி ஊடக நிறுவனங்களிலும் இதேபோன்ற சூழ்நிலைகள் காணப்பட்டதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புவதாக, இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்களை நிறுத்துமாறு, ஊடக நிறுவனத் தலைவர்களை அறிவுறுத்துமாறு, ஜுன் 25ஆம் திகதி அரச தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதிய கடிதத்தில், இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் சில ஊடக நிறுவனங்களில் பணிபுரியும் ஊடகவியலாளர்கள், அலுவலகத்திற்கு வெளியே பணிபுரியும் ஊடகவியலாளர்கள் (பிராந்திய ஊடகவியலாளர்கள்), ஊடகங்களின் பிற பிரிவுகளில் பணிபுரியும் பெண்கள் மாத்திரமன்றி, ஊடகங்களில் சில ஊடகவியலாளர்களால் மாத்திரமன்றி, ஆசிரியர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்களாலும் மேற்கொள்ளப்பட்ட பாலியல் துன்புறுத்தல் குறித்து ஏராளமான தகவல்கள் வெளியாகியுள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

பாதிப்பிற்குள்ளான ஊடகவியலாளர்கள் மற்றும் பிற ஊடகவியலாளர் குழுவினால் இதுபோன்ற சம்பவங்கள் குறித்த ஆதாரங்களையும், சில தகவல்களையும் நிறுவனத் தலைவர்களுக்கு தெரிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எனினும் பெரும்பாலான சம்பவங்கள் நிறுவனத் தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீண்டும் தலாய் லாமா கூறியதற்கு வருகிறேன். இப்படியான குற்றச்சாட்டுக்களுக்கு ஆளானவர்கள் புத்த பகவானையும் பௌத்தத்தையும் பின்பற்றுபவர்கள். அவர்கள் தமது ஊடக தர்மத்தை கடைபிடித்து நடக்கிறார்களோ இல்லையோ குறைந்தபட்சம் அவர்கள் பின்பற்றும் மதத்தையும் அதைத் தோற்றுவித்தவர் கூறிய கருத்துக்களையும் ஏற்று மதித்து நடக்க வேண்டும்.

"பாலியல் துஷ்பிரயோகத்தை பௌத்தத்தில் தடை செய்யப்பட்டுள்ளது" என்று தலாய் லாமா கூறியதை அவர்களுக்கு நினைவூட்ட வேண்டியுள்ளது.

# பழந்தமிழர்கள் மருந்து அரைக்க பயன்படுத்திய “பாறைக்கிண்ணங்கள்”

## திருநெல்வேலிக்கு அருகே கண்டுபிடிப்பு



திருநெல்வேலி - திருச்செந்தூர் சாலையில் உள்ள செய்துங்கநல்லூருக்கும், திருநெல்வேலி-தூத்துக்குடி சாலையில் உள்ள முறப்பநாட்டுக்கும் இடையே உள்ள சிறு கிராமம் வசவப்பபுரம். இங்கு பறம்பு ஒன்று உள்ளது. பறம்பு என்றால் மலைக்குன்றுகள் நிறைந்த பகுதியாகும்.

பாறைகளும் சரல்களும் நிறைந்த இந்தப் பகுதியை “பறம்பு” என்று அழைக்கின்றனர். இந்த பறம்பு பகுதி விவசாயத்திற்கு உகந்தது இல்லை. தென்னை, பனை போன்ற மரங்களை வளர்த்து தோட்டங்களை உருவாக்கவும் முடியாத இடம். வீடு கட்டி மக்கள் வாழும் ஊராகவும் மாற்ற முடியாத இடம். மேலும் ஆடு மாடு மேய்ச்சலுக்குக்கூட இந்த இடத்தை பயன்படுத்த முடியாது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, இங்கு திருநங்கைகளுக்கு குடியிருப்பு கட்டிக் கொடுக்கவும், தூத்துக்குடி நாலு வழிச்சாலை அமைக்கவும் சரல் மண்ணைத்தோண்டியபோது, நிறைய முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன. ஆதிச்சநல்லூரிலும், சிவகளையிலும் முதுமக்கள் தாழிகள் நிறைந்து காணப்படுவது போலவே இங்கும் முதுமக்கள் தாழிகள் காணப்படுகின்றன. எதற்கும் பயன் படாத இடத்தை நம் முன்னோர்கள் இடுகாடாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

நிலங்களின் தன்மையறிந்து அதனைப் பயன்படுத்துவதில் நம் முன்னோர்கள் மிக்க திறமைசாலிகள் என ஆதிச்சநல்லூர், சிவகளை, வசவப்பபுரம் பறம்புகள் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

சிங்கம் பாறை

இந்த இடத்தில் சிங்கம் பாறை என்னும் இடத்தில் “பாறைக் கிண்ணங்கள்” காணப்படுகின்றன. இந்தப்பாறைக் கிண்ணங்கள் மிகவும் பழமையானவை.

பழைய கற்கால மனிதர்கள் உருவாக்கிய பாறைக் கிண்ணங்களான இவற்றில் கற்குழிகள் காணப்படுகின்றன. அவற்றை, தொல்லியல் ஆர்வலர்களான மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உயிரியல் துறை பேராசிரியர் டாக்டர் சுதாகர், தூத்துக்குடி கூட்டுறவு துணைப்பதிவாளர் சுப்பு ராஜ், பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரி வரலாற்றுத் துறை பேராசிரியர் முனைவர் ஜோசப் ராஜ், எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராசு, முத்தாலங்குறிச்சி கிராம நிர்வாக அதிகாரி கந்தசுப்பு, ஆய்வு மாணவர் அபிஷ்விக்னேஷ் ஆகியோர் பார்வையிட்டனர்.

இது குறித்து மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உயிரியல் துறைப்பேராசிரியர் டாக்டர் சுதாகர் கூறியதாவது:

இளஞ்சிவப்பு குழிகள்

சாலைகள் அமைக்கவும் வீடு கட்டவும் இந்த பகுதியிலிருந்து கல்லும், சரலும் பெருமளவில் எடுக்கப் படுகின்றன. இதனால் இந்தப் பகுதியில் உள்ள பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய முதுமக்கள் தாழிகள் அழிக்கப்பட்டு வருகின்றன. ஒரு முறை அவ்வாறு கல் மற்றும் சரல் எடுக்கும் போது ஒரு தாழி உடைந்துள்ளது. அதனுள் ஒரு வாள் இருந்துள்ளது. அதனை வருவாய்த் துறையினர் கையகப்படுத்தியதாக அந்த ஊர் மக்கள் கூறுகின்றனர்.

இந்த பகுதியில் உள்ள தாழிகள் சிவகளையில் உள்ள தாழிகளை ஒத்துள்ளதாகக் கணிக்கிறேன்.

மேலும் ஆங்காங்கே பெரிய பாறைகளும் இந்த பறம்பில் உள்ளன. இந்த பாறையில் நல்ல வழுவழுப்பான இளஞ்சிவப்பு நிறத்தில் சிறு சிறு குழிகள் நிறைய இருக்கின்றன. இந்த குழிகள் கல்லையோ அல்லது ஒரு இரும்பு குழவியையோ வைத்து உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என நினைக்கிறேன்.

பழந்தமிழ் மக்கள் ஏன் இத்தகைய குழிகளை இந்த பாறைகளில் உருவாக்கியிருக்கிறனர் எனச் சிந்தித்தால் ஏதோ நாட்டு மருந்து தயாரிக்க சில பொருட்களைப் பாறையில் வைத்து அரைத்து இருக்க வேண்டும் எனக் கணிக்கத் தோன்றுகிறது.

எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு இந்த குழிகள் உருவாக்கப்பட்டிருக்கும் என்பதற்கு இப்போது சரியான பதில் இல்லை. ஆனால் கண்டறிவது கடினமில்லை. கண்டறிவது அவசியம். இந்த குழிகள் பல ஆயிரம் ஆண்டுகள் முன் உருவாக்கியிருக்க வேண்டும் என்பது என் கணிப்பு.

இந்த குழிகளில் அரைத்தது என்ன மருந்து என்ற தகவல் தெரியவில்லை. சுற்று வட்டார மக்களைச் சந்தித்துப் பேசினால் எதாவது தகவல் கிடைக்க வாய்ப்புள்ளது. அங்குள்ள சமுகத்தில் சிலர் இந்த மருந்தை இப்போதும் தயாரிக்கும் பழக்கம் உள்ளவர்களாக இருக்க வாய்ப்புள்ளது.

ஒரே பாறையில் ஆறு குழிகளைப் பார்த்தோம். ஆனால் இது மாதிரி நிறைய இத்தகைய பாறையில் இந்த குழிகளைக் காணமுடிகிறது. இதனை வைத்து நான் கணிப்பது என்னவென்றால் ஒரு காலத்தில் இங்கு தயாரிக்கப்பட்ட மருந்து மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கும் எனக் கருதுகிறேன்.

இந்த குழிகள் ஒவ்வொன்றும் உள்ளங்கை அளவில் இருக்கின்றன. மேலும் இவை சுமார் ஐந்து செண்டிமீட்டர் ஆழம் கொண்டவை. இவை நேர்த்தியாகப் பார்க்க அழகாக உள்ளன.

இந்த இடம் அகழ்வாராய்ச்சியாளர்களுக்கு மட்டுமல்ல வரலாறு, தமிழ், வேதியியல் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்களின் சிந்தனைக்கு நல்ல தீனி. எனவே தமிழக அரசு வசவப்பபுரத்தில் விரைவாக அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 100 வருடங்களுக்கு முன்பே ஆதிச்சநல்லூரை ஆய்வுசெய்த அலெக்ஸாண்டர் இரியா, தாமிரபரணி ஆற்றங் கரையில் 37 இடங்களை ஆய்வு செய்ய வேண்டும் என எழுதி வைத்திருந்தார். அதில் வசவப்பபுரம் பறம்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தாமிரபரணி கரையில் தற்போது மாநில அரசு அகழாய்வு களங்களைத் தேடும் பணியைத் தொடங்கியுள்ளது. அதோடு, வசவப்பபுரம் பறம்பையும் ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகழாய்வு ஆர்வலர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.



**- மணிராஜ், திருநெல்வேலி**



# எதிர்வரும் ஆகஸ்ட் ஆறாம் திகதி வெள்ளியன்று மலர்கிறது...

வெள்ளி விழா 25th ANNIVERSARY www.uthayannews.ca UTHAYAN உதயன்

உங்கள் அபிமானத்திற்குரிய பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் எதிர் வரும் **06-08-2021** வெள்ளிக்கிழமை வெளிவருகின்றது.

தமிழ் பேசும் நல்லுலக நாடுகளிலிருந்து சிறப்புக் கட்டுரைகள், இலக்கியப் படைப்புக்கள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றோடும் அதிக பக்கங்களோடும் வாசகர்களையும் வர்த்தக அன்பர்களையும் எழுத்தாள நண்பர்களையும் மகிழ்விக்க மலர்கிறது.

சிறப்பிதழில் தங்கள் படைப்புக்கள் இடம்பெற விரும்பும் எழுத்தாளர்கள் கவிஞர்கள் வரவேற்கப்படுகின்றார்கள். தங்கள் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரித்து ஆதரவளிக்கவும் வாழ்த்தவும் விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ளவும்.

## "உதயன்" வெள்ளிவிழா ஆண்டுச் சிறப்பிதழ்

## August 6

VJ-Colombo

**416 732 1608** அல்லது **416 752 1524** | மின்னஞ்சல்:- **uthayannews@yahoo.com**



# MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



## உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்



**Scarborough / Downtown Toronto: 416-489-2000**
**Mississauga / Brampton: 416-650-5400**



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |


**Mark Shamly**
*Tamil Consultant*

*Proudly Served over 15,000 clients since 2004*
**Visit : GtaCredit.Com**

**Ajay Oberoi**
*Experienced Credit Counsellor*

# குடாக்கடலில் சீனர்கள்: உண்மையில் நடப்பதென்ன?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**கௌ**தாரிமுனை கிராமசேவகர் பிரிவிற்குள் வரும் கல்முனை பந்தலடி என்ற பகுதியில் அமைந்திருக்கும் கடலட்டைப் பண்ணையில் சீனர்கள் காணப்பட்டமை சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

அக்கடலட்டைப் பண்ணை பற்றிய விவரத்தை முதலில் வெளிப்படுத்தியது கிளிநொச்சியை மையமாகக் கொண்டியங்கும் ஒரு செய்தியாளர்தான். அப்பகுதியில் சீனர்கள் கடந்த இரண்டரை மாதங்களாக கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டு வருவது தொடர்பான தகவல்கள் அச்செய்தியாளருக்கு கிடைத்தன. மீனவர் சங்கத்தின் சில முக்கியஸ்தர்கள் சீனர்களோடு இணைந்து செயற்படுவதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

தனக்குக் கிடைத்த தகவலை உறுதிப்படுத்துவதற்காக கல்முனை பந்தலடிக்கு மேற்படி செய்தியாளர் சென்றிருக்கிறார். அங்கிருந்த சீனர் கடல் வழியாகப் படகின் மூலம் அந்த இடத்தைவிட்டு நீங்கிச் செல்வதை கண்டிருக்கிறார். அந்த படகில் கியூலன் Guilan (Pvt) Ltd பிரைவேட் லிமிடெட் என்று எழுதப்பட்டிருக்கிறது.

அரியாலை கிழக்கில் ஏற்கனவே இயங்கி வரும் கடலட்டைப் பண்ணையிலிருந்து அவர்கள் படகுகள் மூலமாகவே கல்முனை பந்தலடிக்கி வந்து போகிறார்கள். ஊடகங்களில் அந்த இடம் கௌதாரிமுனை என்று குறிப்பிடப்பட்டாலும் அது கல்முனை பந்தலடி என்பதே சரி.கல்முனை கடலில் வெற்று பிளாஸ்டிக் பரல்களை பரப்பி அவற்றின்மீது குடில் ஒன்றை அமைத்து சீனர்கள் அதில் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் பூநகரிப் பகுதியூடாக அதாவது தரை வழிப் பாதை ஊடாக அந்தப் பகுதிக்கு செல்வதில்லை. மாறாக கடல்வழிப் பாதை ஊடாக அரியாலை கிழக்கில் இருந்து அங்கே வருகிறார்கள். கல்முனை பந்தலடியிருந்து கிழக்கு அரியாலை இருபது நிமிடங்களுக்கு குறையாத கடற்பயணத் தூரம்.

அரியாலை கிழக்கில் ஏற்கனவே ஒரு கடலட்டைப் பண்ணையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தப்பண்ணை 2011ஆம் ஆண்டு ஒரு தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களக் குடிமகனின் பெயரில் பதியப்பட்டுள்ளது. அவர்தான்2018இல் சீனர்களை அங்கே கொண்டு வந்தார். சீனர்களோடு தமிழர்களும் வேலை செய்கிறார்கள். முகாமையாளராக இருப்பவர் ஒரு தமிழர். உதவியாளர்களாகவும் தமிழர்கள் உண்டு. அப்பண்ணை கடற்கரையில் ஒரு தனியாருக்கு சொந்தமான காணியில் அமைக்கப்பட்டிருக்கிறது. கடற்கரையில் 16 சீமெந்துத் தொட்டிகளை உருவாக்கி அந்த தொட்டிகளில் கடற் சூழலை செயற்கையாக ஏற்படுத்தி அதற்குள் கடலட்டைக் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறார்கள். இந்த கடலட்டைக் குஞ்சுகளைத்தான் சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் உட்பட பெரும்பாலான கடலட்டை வளர்ப்பவர்கள் விலைக்கு வாங்குகிறார்கள். அப்பண்ணையைத்தான் கல்முனை கடலை நோக்கி அவர்கள் விஸ்தரிக்க முயன்றதாக கருதப்படுகிறது.

ஆனால் சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் அதற்கு அனுமதி வழங்கவில்லை. அதைத்தொடர்ந்து கல்முனை பந்தலடி பகுதியைச் சேர்ந்த விநாயகர் கடற்றொழிலாளர் சங்கத்தின் பெயரால் இரண்டு ஏக்கர் காணியில் கடலட்டைப் பண்ணை ஒன்றை உருவாக்குவதற்கு குறிப்பிட்ட துறைசார் திணைக்களத்திடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது. எனினும் அனுமதி இதுவரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் சீனர்கள் கடற்றொழிலாளர் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலருடைய அனுசரணையோடு அங்கே கடலட்டை வளர்ப்பை தொடங்கிவிட்டார்கள் என்று கூறப்படுகிறது.

கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக தமிழ் கடற்பகுதிகளில் கடலட்டை பண்ணைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சுமார் 15 கடலட்டைகளைக் கொண்ட ஒரு கிலோ கடலட்டை கிட்டத்தட்ட 20,000 ரூபாய்க்கு போகிறது. இது சீனாவில் கிட்டத்தட்ட இரண்டு லட்சத்துக்கு விற்கப்படும் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கடலட்டையில் பெரும்பகுதியை சீன நிறுவனங்களே கொள்வனவு செய்கின்றன.

அரியாலை கிழக்கில் சீனர்கள் தங்கியிருக்கும் பண்ணை அமைந்திருக்கும் இடம் யாழ் குடா நாட்டின் வரைபடத்தில் குடாக்கடலை நோக்கி துருத்திக்கொண்டு தெரியும் ஒரு ஒப்நிலத் துண்டு ஆகும். அப்படித்தான் கல்முனை பந்தலடியும். பெரு நிலப்பரப்பிலிருந்து கடலை நோக்கி துருத்திக்கொண்டு தெரியும் ஒரு நிலத்துண்டு அது. இவ்விரண்டு நிலத் துண்டுகளிலும் நிலை கொண்டிருப்பவர்கள் குடாக்கடலின் மீது தமது கண்காணிப்பை வைத்திருக்கலாம். கல்முனையில் இருந்து குறுக்காக கிட்டத்தட்ட 48 கிலோமீட்டர் தொலைவில் நெடுந்தீவு காணப்படுகிறது. நெடுந்தீவில் இருந்து குறுக்காக ஏறக்குறைய 50கிலோ மீட்டர் தொலைவிலேயே தமிழகம் காணப்படுகிறது.

நெடுந்தீவும் உட்பட யாழ் குடாநாட்டின் மூன்று தீவுகளில் சீனா மீளப் புதுப்பிக்கப்படும் எரிசக்தி திட்டம் ஒன்றை நிறுவ இருக்கிறது. அதற்குரிய காணிகள் சுவீகரிக்கப்பட்டு வேலியிடப்பட்டு அவற்றில் இது மின்சார சபைக்கு சொந்தமான இடம் இதற்குள் யாரும் நுழையக்கூடாது என்று அறிவித்தல் பலகை நடப்பட்டிருக்கிறது.

எனவே கிழக்கு அரியாலை, கல்முனையில் பந்தலடி, நெடுந்தீவுமுட்பட மூன்று தீவுகள் ஆகியவற்றை இணைத்து குடாக்கடல் உள்ளடங்களாக பாக்கு நீரிணையில் நெருக்கமான ஒரு வலைப்பின்னலை உருவாக்கலாம். அப்படிப்பார்த்தால் இதை வெறுமனே கடலட்டை விவகாரமாக மட்டும் பார்க்கலாமா என்ற சந்தேகங்களும் உண்டு.

ஆனால் சீனர்கள் உலகம் முழுவதும் தாங்கள் சந்தைகளைத்தான் திறப்பதாக கூறுகிறார்கள். தங்களுடைய பிராந்தியத்துக்கு வெளியே உலகில் எந்த ஓரிடத்திலும் தாங்கள் போர்முனையைத் திறக்கவில்லை என்றும் கூறுகிறார்கள். சீன விரிவாக்கம் எனப்படுவது முழுக்க முழுக்க சந்தை விரிவாக்கம்தான். உட்கட்டுமான அபிவிருத்திதான் இந்த உட்கட்டுமான அபிவிருத்திகள் அனைத்தும் சீனாவை நோக்கி மூலப்பொருட்களை கொண்டு செல்லும் அதே சமயம் சீனாவில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வெளிச் சந்தைக்கு கொண்டு வரும் நோக்கிலானவை. எனவே சீனா உலகம் முழுவதும் முதலீடுகளை மட்டுமே நகர்த்தி வருவதாக கூறிக் கொள்கிறது.

மாறாக மேற்கு நாடுகள் படைகளை நகர்த்துகின்றன. உலகின் பல்வேறு இடங்களில் மேற்கு நாடுகள் படைத்தளங்களைப் பேணி வருகின்றன. ஆனால் சீனா பொதுவாக முதலீடுகளைத்தான் நகர்த்தி வருகிறது. அது ஆக்கிரமிப்பு நோக்கிலானது அல்ல என்று சீனாவை ஆதரிப்பவர்களும் சீன முதலீடுகளை ஊக்குவிப்பவர்களும் கூறிவருகிறார்கள்.

சீனாவுக்கு எதிராக தேவையற்ற பயம் ஒன்றை உலகம் முழுவதிலும் உள்ள ஒரு பகுதி விமர்சகர்கள் மற்றும் ராஜதந்திரிகள் கட்டி எழுப்பி வருவதாக சீனாவின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். இது ஒருவித அச்ச நோய். அதாவது சீனா போபியா என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் இது தனிய முதலீடு மட்டுமல்ல இதுவும் ஒரு ஆக்கிரமிப்புத்தான் என்று சீனாவை சந்தேகத்தோடு பார்ப்பவர்கள் கூறுகிறார்கள். பலமான ஒரு பொருளாதாரம் நிதி ரீதியாக நலிவுற்ற பொருளாதாரங்களின் மீது மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு இதுவென்றும் தேவைகளை அடிப்படையாக வைத்து இயலாமையைச் சுரண்டி ஒரு சந்தை ஆக்கிரமிப்பு முன்னெடுக்கப்படுகிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இதுவும் கத்தியின்றி ரத்தமின்றி நிகழும் ஒரு யுத்தம்தான் என்று அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். இது சீனாவின் கடன் பொறி அல்லது சந்தை குண்டு என்றும் அவர்கள் அழைக்கிறார்கள்.

மேலும் சீனப் பெருந்தலைவர் மாவோ சே துங் முன்பு கூறிய ஒரு கதையை அவர்கள் நினைவுபடுத்துகிறார்கள். பெரிய மீனும் சிறிய மீனும் வசிக்கும் ஒரு கடலில் பெரிய மீன் சிறிய மீன்களை தனக்கு உணவாகச் சாப்பிட்டு வந்தது. ஒரு கட்டத்தில் சிறிய மீன்கள் பெரிய மீனிடம் போய் முறையிட்டன. அப்பொழுது பெரிய மீன் கூறியது இங்கு எல்லோருமே சமம். அவரவர் அவரவருக்கு விருப்பமானதை சாப்பிடலாம் என்று. ஆனால் சிறிய மீன்களால் அவற்றின் சிறிய வாயால் எப்படி பெரிய மீனைச் சாப்பிடுவது?

நாடுகளுக்கிடையே நிதி ரீதியாக ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் பொழுது பலம் தொடர்பில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் பொழுது எல்லாரும் ஒன்றுதான் எல்லாரும் ஒன்றையே செய்யலாம் என்று கூறுவதைப் போன்றதுதான் வறிய நாடுகளின் மீதான சீனாவின் முதலீடுகளும் என்று சீனாவை விமர்சிக்கும் தரப்பினர் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இப்படிப்பட்ட வாதப்பிரதிவாதங்களின் பின்னணியில்தான் இலங்கைத் தீவிலும் சீன முதலீடுகள் அதிகரித்து வருகின்றன. ஒருபுறம் அந்த முதலீடுகளை விமர்சிப்பவர்கள் விமர்சித்துக் கொண்டேயிருக்க இன்னொருபுறம் சீனர்கள் தென்னிலங்கையை தாண்டி தமிழ் பகுதிகளுக்கும் பரவி வருவதைத்தான் கல்முனைக்கடலில் அனுமதி பெறப்படாத கடலட்டைப் பண்ணை உணர்த்தியிருக்கிறதா?

## வீணாவின் கவிக்கணை

கைப்பிடி மண் உனது,
அதை கலைத்து விடுவதும்,
பாவையாக்குவதும்
உன் திறமை,
வெள்ளைக்காகிதமாய்
உன் வாழ்க்கை,
அதில் எழுது கோலாய் நீ,
உன் தலையெழுத்தை
எழுதும் பிரம்மனாகவும் நீயே,
அதிஷ்டமோ, ஆபத்தோ,
உன் பிடியிலே உள்ளது,
உன் எழுதுகோலின் மை
தீரும்வரை, அழகான
வரிகளை எழுதிடு,
நம்பிக்கையுடன் போராடிடு,
வாழ்க்கை இனிக்கும்
உன்னை இனியவனாக்கும்!

ஒன்ராறியோ முழுவதும் லட்சக்கணக்காணோர் தங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்கள்.

**உங்கள் பங்கை செய்யுங்கள். தடுப்பூசியை போட்டுக்கொள் ளுங்கள்.**

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள், மருத்துவ மனைகள், டாக்டரின் காரியாலயங்கள், பார்மசிகள் மற்றும் பெருந்தொகையாக தடுப்பூசி போடும் இடங்களில் கிடைக்கும். ஒவ்வொரு தடுப்பூசியும் முன்பிருந்த சாதாரண நிலைமைக்கு நம்மை நெருக்கமாகக் கொண்டுவரும்.

**ontario.ca/bookvaccine**
இல் உங்கள் நியமிப்பை இன்றே பதிவுசெய்யுங்கள் அல்லது 300 மொழிகளில் உதவி பெற்றுக்கொள்ள
**1-888-999-6488**
ஐ அழையுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario


# கனடியத் தாயின் அகவை - 154

## நிலவுக்கு மூப்பேது



விண்ணுலகத் தேவதைகள்,
வெண்துகில்கள் பொடியாகி,
மண்ணில் விழுந்தனவோ!
பனிபடர்ந்த மலைகளெல்லாம்
வெள்ளெருக்கம் மலர் சூடும்
மண்சுமந்த பெருமானின்
வெண்சடையாய் மாறியதோ!

பால் பொங்கி வழிவது போல்
மேலங்கி அணிந்தாளோ!
கீழிறங்கி பாய்ந்துவரும்
குளிர் மங்கை நயாகரா
அருவி வீழ்ச்சியல்ல - புது
எழுச்சியென்போம்!

மண்மகளின் மார்பழகோ
மலைச்சிகர முகடென்பேன்!
மாநிலங்கள் தோறும்
மலையரசி மங்கையிவள்,
எழில் முகமோ கொள்ளையின்பம்,
அட! கவர்ச்சிமிகு கனடியத் தாய்,
கன்னியவள் தேவதைதான்!

விண்முட்டும் கோபுரங்கள்,
எண்ணி முடிக்கும் முன்னே,
கண்ணெரே கட்டுகிறான்
கனடியப் பொறியாளன்
மாடி மனை ஏராளம்!

எங்கெங்கு காணினும் சக்தியடா
ஏழுகடல் அவள் வண்ணமடா!'
நாம் வாழுகின்ற பூமியைத் தான்
அன்று, அந்த கவிவாணன் பாடி வைத்தானோ!

உழைப்பால் உயர்ந்தவர் நாம்,
இன்ச் சண்டை இங்கில்லை
மதச் சண்டை  இங்கில்லை
மொழிச் சண்டை இங்கில்லை
எல்லோரும் இந்நாட்டு மன்னர் தாம்!

அடுத்தடுத்து வளர்ந்தோங்கி,
ஆகாசம் தொடுகின்ற
பசுமை நிறை தருக்களெல்லாம்
அன்னையிவள் முதிசமடா!
மின்னனுசக்திக்கும்
தலைவியே இவள் தான்டா!

எண்ணெயும் இங்குண்டு
எக்கும் இங்குண்டு
ஈயம் வெள்ளியென
கனிமங்கள் பலவுண்டு,
வண்ணத்துப் பூச்சிகளாய்
வட்டமிடும் வாலைக் குமரிகளின்
அங்கங்கள் மின்னுகின்ற
பொன்விளையும் பூமியென
துங்கமணி மின்போலும்
பூப்படைத்து சிரிக்கின்றாள்!

எங்கிருந்து வந்தாலும்,
தங்கமே! வா!
தலைவைத்து மடிமீது உறங்கு,
வேல்பிடித்த மறவனைப் போல்
மன உறுதி கொண்டே தான்
என் நிழலில் வளர்ந்திடுவாய்,
சுதந்திரமாய் சுவாசிப்பாய்,
தூயவனே! செல்வமே!
தாதியல்ல நான் உனக்கு,


தாயென்று உணர்ந்திடுவாய்!
துயர் நீங்கி அயர்வின்றி உழைத்திடுவாய்
பயன் தரும் ஆற்றலை வளர்த்திடுவாய்
அனைத்துலகிற்கும் அறிஞனாய் - தலைவனாய்
தலை நிமிர்வாய்!
அன்னை நான் வாழ்த்துகிறேன்!
அச்சமின்றி நடைபோடு..!

அகவை நூற்று ஐம்பதுடன் நாலு கூடி
ஆனந்த விழாக்காண
குழந்தைகள் கூடுகின்ற
கொடிபறக்கும் தலைநகரில்
குழுமியே வருகின்றார்
குதூகலித்து திரளுகின்றார்!

முழுமையான நிலவுக்கு
முதுமையில்லை என்றுணர்ந்தேன்!
தமிழ் போல் இளமை பொங்கும்,
என் தாயின் திருமுகத்தை
தினம் தினம் பார்க்கின்றேன்!
திருப்பாதம் தொழுகின்றேன்!

நன்றி.. நன்றியென
வாழ்நாள் முழுமையும்,
வந்தாரை வாழவைக்கும்
இன்பத் திருநாட்டை
வந்தனை செய்திடுவோம்!

- வீணை மைந்தன்



# Celebrating Canada's First Chair in Tamil Studies

*"More than 3,800 donors came together to create Canada's first Chair in Tamil Studies at U of T. This remarkable achievement will help us to preserve, grow and celebrate Tamil culture for the benefit of our students and the broader community."*

*—Wisdom Tettey*
*Vice-President, University of Toronto*
*Principal, University of Toronto Scarborough*

Eastern Toronto is home to one of the largest Tamil communities outside of the Indian subcontinent. This vibrant community came together to raise $3 million from donors around the world for a new Chair in Tamil Studies at the University of Toronto Scarborough. The Canadian Tamil Congress and Tamil Chair Inc. worked with individuals, businesses, alumni, governments and community organizations to realize this remarkable achievement.

The first of its kind in Canada, the new chair will help inspire inclusive excellence at University of Toronto Scarborough by contributing to our efforts to give students from every background a chance to engage with the history, language, literature and traditions of one of the world's most enduring cultures.

கனடாவின் மிகப்பெருமை வாய்ந்த பல்கலைக்கழகத்தின் வரலாற்று முதன்மை மிக்க இந்த முயற்சிக்குப் பங்களிப்புச் செய்த அனைத்து அமைப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

UNIVERSITY OF TORONTO

To learn more about the Chair in Tamil Studies and the community of donors that helped create it, please visit: https://uoft.me/TamilCampaign


Organized By Friends Matrimony
iSingle Mingle
Global Event
SAT, JULY 10TH 2021
ZOOM EVENT IST 6:30PM | EST 9:00AM | ECT 8:00AM
PERFORMERS
Prabha Balakrishnan
Singer
Dayan Shan
Comedian & Director
Jeevanandhan
Music Composer
FOR SPONSORSHIP CALL US BEFORE FRIDAY
4164776854 | 4164772259 | 647 709 1536.
SPECIAL GUEST
VIJAY TV PUGAZH
Friends
MATRIMONY
WWW.FRIENDSMATRIMONY.COM


Carefirst Family Health Team
Family Health Team
புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்
தமிழ் பேசும் வைத்தியர்கள்
ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
நீரிழிவு கல்வி திட்டம்
Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA
Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com
Steeles
McNicoll
Silver Star
Kennedy
Midland
Finch
N

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....



மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...





காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# கிண்டி கிங்ஸ் நிலையத்தில் கரோனாவிற்கு பிந்தைய நல்வாழ்வு மையம்: முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

கிண்டி கிங்ஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கரோனாவிற்கு பிந்தைய நல்வாழ்வு மையம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பன்னாட்டு தடுப்பூசி மையம் ஆகியவற்றை முதல்வர் ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். இம்மையம் கரோனா தொற்றிலிருந்து மீண்டவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு சிகிச்சையும், பயிற்சியும் அளிக்கும் மையமாகும்.இதுகுறித்து தமிழக அரசு இன்று வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு:

''கிங்ஸ் நிலையத்தில் அமைக்கப் பட்டுள்ள கரோனாவிற்கு பிந்தைய நல்வாழ்வு மையம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பன்னாட்டு தடுப்பூசி மையம் ஆகியவற்றை முதல்வர் ஸ்டாலின் இன்று திறந்து வைத்து, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மருத்துவர் தின விழாவில் கரோனா பெருந்தொற்று பேரிடர் காலத்தில் பணிபுரிந்த மருத்துவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

சென்னை, கிண்டி, கிங்ஸ் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அமைந்துள்ள அரசு கரோனா மருத்துவமனையில், சட்டமன்றப்பேரவையில் ஆளுநர் உரைக்கு அளித்த பதிலுரையில் அறிவித்தவாறு, புதிதாக அமைக்கப்பட்டுள்ள கரோனாவிற்கு பிந்தைய நல்வாழ்வு மையத்தை (நிஷீமீ சிஷீஸ்வீபீ சிணீக்ஷீமீ சிறீவீஸீவீநீ) தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் இன்று (1.7.2021) திறந்து வைத்தார்.இம்மையத்தில் கரோனா தொற்றுலிருந்து மீண்டவர்களுக்கு இதயம், நரம்பியல், சிறுநீரகம், வயிறு மற்றும் குடல், கண், நீரிழிவு, உளவியல் தொடர்பான சிகிச்சைகள் அளிக்கப்படும். மேலும், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை, உடற்பயிற்சி போன்றவற்றிற்கான வசதிகளும் இம்மையத்தில் அமைக்கப்பட்டுள்ளன.அதனைத் தொடர்ந்து, இந்த வளாகத்தில் மேம்படுத்தப்பட்ட பன்னாட்டு தடுப்பூசி மையத்தை முதல்வர் ஸ்டாலின் இன்று திறந்து வைத்து, வெளிநாடு செல்பவர்களுக்கான மஞ் சள் காய்ச்சல் தடுப்பூசி செலுத்தும் பணியினை பார்வையிட்டார். இம்மையம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

இம்மையத்தில், சர்வதேச பயணிகளுக்கு பன்னாட்டு சுகாதார ஒழுங்குமுறை சட்டத்தின்படி



ஆப்பிரிக்க மற்றும் தென் அமெரிக்க நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வோருக்கு 1948ல் இருந்து மஞ்சள் காய்ச்சல் தடுப்பூசி மற்றும் போலியோ சொட்டு மருந்தும் செலுத்தப்பட்டு, உலக சுகாதார நிலையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசி சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. தென் இந்திய மக்களுக்கு பயனளிக்கும் வகையில் மாநில அரசின் கீழ் செயல்படும் ஒரே தடுப்பூசி மையமாக இந்நிலையம் விளங்குகிறது. மேலும், ஹஜ் பயணம் மேற்கொள்வோர்க்கு மூளைக் காய்ச்சல் தடுப்பூசியும் இம்மையத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

பின்னர், சென்னை, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மருத்துவர் தின விழாவில் முதல்வர் ஸ்டாலின் தலைமையேற்று, அரசு மருத்துவர்களுக்கான பாராட்டுச் சான்றிதழ்களை மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (ணிஷிமி), இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் ஆகியோருக்கும், தனியார் மருத்துவர்களுக்கான பாராட்டுச் சான்றிதழ்களை இந்திய மருத்துவர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவச் சங்கங்களுக்கும் வழங்கி கௌரவித்தார்.மேலும், நீலகிரி மாவட்டத்தில் பழங்குடி இன மக்களுக்கும், தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் 100 சதவிகித தடுப்பூசி போடப்பட்டு, இந்தியாவிலேயே முதல் மாவட்டமாக நீலகிரி மாவட்டத்தை விளங்கிட செய்த நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் இன்னசென்ட் திவ்யாவுக்கு, முதல்வர் பாராட்டு சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் அவர்களிடம் 55,000 Pulse Oxymeter கருவிகளை சுகாதாரத் துறை பணியாளர்களின் பயன்பாட்டிற்காக தமிழக முதல்வர் வழங்கி, மாநில தலைநகரம் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் அமைக்கப்பட்ட கரோனா கட்டுப்பாட்டு அறை (War Room) செயல்பாடுகளை விளக்கும் குறும்பட தகட்டினையும் வெளியிட்டார்.

கரோனா நிவாரணப் பணிகளுக்காக முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களின் ஒருநாள் சம்பளத் தொகையான 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை தமிழக முதல்வரிடம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் சுதா சேஷையன் வழங்கினார். நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் மருத்துவர் தின விழாவில் பேசியதாவது:''இன்று மருத்துவர் தினம். இந்த அரசைப் பொறுத்தவரையில் மக்கள் நலனுக்கான அரசு மட்டுமல்ல, மருத்துவர்கள் நலனுக்கான அரசாக உங்களுக்கு என்றும் துணை நிற்கும் என்பதை எடுத்துச் சொல்லி, மருத்துவ தின விழாவில் உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பு பெற்றதற்கு மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லி, உங்களுடைய தியாகத்திற்கும் தொடர்ந்து ஆற்றக்கூடிய பணிகளுக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன் நன்றி''. எனப் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், சேகர்பாபு, சட்டப்பேரவை உறுப்பினர் தாயகம் கவி, டி.கே.ரங்கராஜன், சுகாதாரத்துறைச் செயலர் ராதாகிருஷ்ணன், சுகாதாரத்துறை சிறப்புப் பணி அலுவலர் செந்தில் குமார், தேசிய நல வாழ்வு குழும இயக்குநர் தாரேஸ் அகமது, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் கணேஷ். மருத்துவம் சுகாதாரத்துறை இணைச் செயலாளர் நடராஜன், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழக இணை இயக்குநர் தீபக் ஜேக்கப், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்ட இயக்குநர் டி.என். ஹரிஹரன், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் எஸ்.உமா, சுகி சிவம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்''.இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகள்களை அரசுப் பள்ளியில் சேர்த்த ஐஆர்எஸ் அதிகாரி ஷெரின்



மாற்றம் நம்மில் இருந்தே தொடங்க வேண்டும் என்கிறார், தன் மகள்களை அரசுப் பள்ளியில் சேர்த்துள்ள ஐஆர்எஸ் அதிகாரி ஷெரின் சோமிதரன். அரசு ஊழியர்கள், சமுதாயத்தில் உயர் நிலையில் இருப்பவர்கள், அதிகாரமிக்க பதவியில் இருப்பவர்கள் தங்களின் குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுக்கிறா.மதுரை அருகே திருப்பாலை என்னும் பகுதியைச் சேர்ந்தவர் ஷெரின் சோமிதரன். ஐஆர்எஸ் அதிகாரியான இவர், சென்னை நுங்கம்பாக்கத்தில் இந்திய வருவாய்த் துறையில் ஜிஎஸ்டி இணை இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். அவர் தனது குழந்தைகளான ஆதிரை, ரெனி ஆகிய இருவரையும் அரும்பாக்கத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் சேர்த்துள்ளார்.

ஆதிரை இரண்டாம் வகுப்பிலும் ரெனி எல்கேஜி வகுப்பிலும் சேர்ந்துள்ளனர். மகள்களை அரசுப் பள்ளியில் சேர்த்தது ஏன் என்பது குறித்து ஷெரின் ஐஆர்எஸ் இது குறித்து விரிவாகப் பேசினார்.''நான் அரசு உதவிபெறும் பள்ளியில் படித்ததால் அத்தகைய பள்ளிச் சூழலை உணர்ந்திருக்கிறேன். அது என் குழந்தைகளுக்கும் கிடைக்க வேண்டும் என்று விரும்பினேன். பொதுவாகவே நானும் ஆவணப்பட இயக்குநராகிய கணவரும் மாற்றுச் சிந்தனை கொண்டவர்கள்தான். இருவரும் இயற்கை விவசாயப் பண்ணையில்தான் எந்தவித ஆடம்பரச் செலவும் இல்லாமல் கழிவுகளை உருவாக்காமல் திருமணம் செய்துகொண்டோம். நம்மாழ்வாருடன் இணைந்து பயணித்திருக்கிறோம். இயற்கை, சூழலியல், மண் சார்ந்த விருப்பங்கள் உண்டு.

மகள்கள் பிறந்ததில் இருந்தே அவர்களை அரசுப் பள்ளியில் சேர்ப்பது குறித்து யோசித்தோம். பாடங்கள், மதிப்பெண்கள், வேலை சார்ந்து மட்டுமே அவர்களை இயங்க வைக்காமல் வாழ்க்கையின் மீது தன்னம்பிக்கையை, பிடிப்பை ஏற்படுத்த ஆசைப்பட்டோம்.அதேபோலப் பல தரப்பட்ட மக்களுடன் அவர்கள் பழக வேண்டும் என்று விரும்பினோம். கல்வி வணிகமயமாகி வரும் சூழலில், பள்ளி என்பது அனைத்துத் தரப்பு மக்களுக்குமானதாக இருக்க வேண்டும். அதற்கு அரசுப்பள்ளி சரியானதாக இருக்கும் என்று முடிவு செய்தோம். மற்ற பள்ளிகளைக் காட்டிலும் அரசுப் பள்ளி மாணவர்கள், எந்த ஒரு சூழலையும் தைரியத்துடனும் நேர்மறைச் சிந்தனையுடனும் அணுகுவார்கள்'' என்கிறார் ஷெரின்.

அரசுப் பள்ளிகளின் கல்வித் தரம் குறித்துத் தொடர்ந்து பொதுச் சமூகத்தில் ஐயங்கள் எழுப்பப்படுவது குறித்துக் கேட்டபோது, ''ஐஏஎஸ், ஐபிஎஸ் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், சமுதாயத்தில் உயர் நிலையில் இருப்பவர்கள், அதிகாரமிக்க பதவியில் இருப்பவர்கள் தங்களின் குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்க வேண்டும். அதன்மூலம் இயல்பாகவே பள்ளிகளின் உள் கட்டமைப்பு, வசதிகள், கல்வித் தரம் குறித்த கேள்விகள் எழுப்பப்படும். அவற்றை அமைப்பதற்கான கட்டாயம் அரசுக்கு ஏற்படும்.இதன் மூலம் கிராமங்களில் உள்ள ஓராசிரியர், ஈராசிரியர் பள்ளிகள் அடுத்தகட்டத்துக்கு வளர்ச்சி அடையும். எனினும் சென்னை உள்ளிட்ட நகரங்களில் சிறப்பாகச் செயல்படும் அரசுப் பள்ளிகளைத் தேடி அங்கு சேர்க்க பல்வேறு வாய்ப்புகள் உள்ளன'' என்று ஷெரின் கூறுகிறார்.அரசுப் பள்ளியில் மகள்களைச் சேர்த்தது குறித்து சக அலுவலக நண்பர்கள் கருத்து என்னவாக இருந்தது என்று கேட்டதற்கு, ''பெரும்பாலானோர் தைரியமான, வரவேற்கத்தகுந்த, முன்மாதிரியான முடிவு என்றுதான் கூறினர்.

அரசுப் பள்ளிகள் குறித்த பிம்பம் மாறியதன் அடையாளமாகத்தான் இதை நினைக்கிறேன். அதேவேளையில் சில ஆண்டுகளுக்கு முன்னால் இத்தகைய நிலை இல்லை'' என்று புன்னகைக்கிறார். பெருந் தொற்றுக் காலகட்டத்தில் பள்ளிகள் ஓராண்டுக்கும் மேலாக மூடப்பட்டுள்ள சூழலில் அரசுப் பள்ளியில் சேர்த்தது குறித்தும் பேசுகிறார் ஷெரின். ''கற்றல் என்பது வாழ்க்கை முழுமைக்குமான நிகழ்வு. குழந்தைகள் பள்ளியில் மட்டுமே கற்பதில்லை. அது ஒரு பகுதிதான். இந்த ஊரடங்கு காலகட்டத்தில் என்னென்ன முறைகளில் அவர்களுக்குப் படிக்க வாய்ப்பு கிடைக்கிறதோ, அந்த வகையில் படிக்கட்டும். இதனால் அவர்கள் படிப்பதற்கான வேகம் வேண்டுமானால் குறைந்திருக்கலாம்.

அதை மதிப்பெண்கள், தேர்வுகள் என்று மட்டுமே பார்க்க வேண்டியதில்லை என்பதை மட்டும் கவனத்தில் கொள்ள வேண்டும்.ஒவ்வொரு குழந்தைக்கும் எந்த வகையிலாவது கற்றல் நிகழ்ந்துகொண்டே இருக்கும் என்று நம்புகிறேன். படிப்பு மட்டுமல்லாமல், இயற்கை விவசாயம், நெசவு, தையல், தச்சு வேலை என கலைகள் சார்ந்தும் மகள்களை வளர்த்தெடுக்க ஆசை. அரசுப் பள்ளிகளில் இத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அரசு அதிகாரிகள் மட்டுமல்லாமல் அதிகாரமிக்க பதவியில் இருப்போர், தொழிலதிபர்கள் என சமுதாயத்தில் உயர் நிலையில் இருப்பவர்கள், தங்களின் குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் சேர்த்தால் இவை அனைத்தும் சாத்திய மாகும்'' என்று விடைகொடுக்கிறார் ஷெரின் ஐஆர்எஸ்.

# இது 'கதையல்ல நிஜம்' 127 கிலோ எடையுள்ள ஒருவர் 5 மாதங்களில் 45 கிலோ எடையை எவ்வித அறுவை சிகிச்சையுமின்றி குறைத்திருக்கிறார்

127 கிலோ எடையுள்ள ஒருவர் 5 மாதங்களில் 45 கிலோ எடையை எவ்வித அறுவை சிகிச்சையுமின்றி குறைத்திருக்கிறார் என்றால் நம்மில் பலருக்கும் இது ஒரு கற்பனைக்கு கதையாகத் தான் தோன்றும். ஆனால் சென்னையைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்பத்துறை இளைஞரான விஜய் சங்கர்(வயது 40) இது 'கதையல்ல நிஜம்' என்று உற்சாகமாக கதைக்கிறார், கனடா உதயனின் சிறப்பு நேர்காணலில் இது எப்படி சாத்தியமாயிற்று என்ற ரகசியத்தை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

அவரிடம் நேயர்கள் சார்பாக சில கேள்விகளை முன் வைத்தோம். அவரும் அதற்கான பதில்களை தன்னுடைய அனுபவத்தின் மூலம் கிடைத்தவற்றை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.



எடை குறைப்பிற்கு முன் | எடை குறைப்பிற்கு பின் விஜய் சங்கர்

**முதலில் உங்களை பற்றிய ஓர் அறிமுகத்தை சொல்லுங்கள்?**

என்னுடைய பெயர் விஜய் சங்கர். 20 ஆண்டுகளுக்கும் மேலாக தகவல் தொழில்நுட்ப பிரிவில் பல்வேறு இடங்களில் பணி செய்துவிட்டேன். பெரும்பாலும் இரவு நேரங்களில் தான் வேலை இருக்கும். இதனால் சரியான நேரத்தில் சாப்பிட முடியாது, தூங்க முடியாது. இதன் காரணமாக 127 கிலோ வரை என்னுடைய எடை கூடிவிட்டது. இதனால் நண்பர்கள், உறவினர்கள், சுற்றத்தாரின் ஏளனத்துக்கு ஆளானேன். மன உளைச்சலும் அதிகமானது. அந்த நேரத்தில் நிறைய 'கூகுள்' செய்து எடை குறைப்பிற்கான ஆராய்ச்சியில் இறங்கினேன். தொடர் முயற்சிக்கு கை மேல் பலனாக 5 மாதங்களில் சுமார் 45 கிலோ எடையை குறைத்தேன். இதற்காக நான் சின்ன சின்ன பயிற்சிகள், நடை பயணம், மற்றும் சாப்பாட்டு முறைகளை மட்டுமே பின்பற்றினேன். எடையை குறைக்கிறேன் என்று லட்சக் கணக்கில் பணத்தை பிடுங்கும் கூட்டத்திற்கு மத்தியில் நான் கற்றுக்கொண்டதை பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு கற்றுக் கொடுத்து வருகிறேன்.

**நீங்கள் எடை குறைப்பினை எப்படி கற்றுக் கொடுக்கிறீர்கள்? இதற்காக ஏதேனும் கட்டணம் வாங்குகிறீர்களா?**

நான் ஏற்கனவே உங்களிடம் சொன்னது போல, என்னுடைய எடை சுமார் 127 கிலோ வரை சென்றதும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். இதனை எப்படியாவது குறைக்க வேண்டும் என எண்ணி சில தனியார் மருத்துவமனைகளின் உதவியை நாடினேன். 'லிப்போ சர்ஜரி' என்ற அறுவை சிகிச்சையின் மூலம் எடையை குறைக்க சுமார் 20 லட்சம் வரை ஆகும் என சொன்னதை கேட்டு மலைத்துப் போனேன். இதே போல் எங்கு சென்றாலும் பணத்தை மட்டுமே நம்மிடம் பிடுங்குவதையே குறிக்கோளாக கொண்டு செயல்படுகிறார்கள் என்பதை புரிந்து கொண்டேன். இதில் இன்னொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும், இது மாதிரியான சிகிச்சைகள் மூலம் நாம் எடையை குறைத்தாலும், பின்னாளில் பக்கவிளைவுகளும் மீண்டும் எடை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் உண்டு என்பதை இவர்கள் மறைத்து விடுகிறார்கள். அப்போது தான் நான் முடிவு செய்தேன். எடை குறைப்பிற்கான ஆராய்ச்சியில் நானே இறங்கினேன். அதில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் முதலில் எனக்கு நானே பரிசோதித்து அதனை ஆதாரப்பூர்வமாக பதிவும் செய்து வைத்துள்ளேன். எனக்கு கிடைத்த நல்ல பலன் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் யாரிடமும் கட்டணம் பெறுவதில்லை.

**எடை குறைப்பிற்காக நீங்கள் கொடுக்கும் பயிற்சிகளைப் பற்றி சொல்லுங்கள்?**

மிகவும் எளிமையான அனைவராலும் செய்யக்கூடிய பயிற்சிகளையே நான் சொல்லித் தருகிறேன். உதாரணமாக சொல்வதானால் தினமும் முறையான நடைபெயர்ச்சி எடுப்பதன் மூலம் மட்டுமே நம்முடைய எடையை குறைக்க முடியும். கூடுதலாக ஒரு சில உடற்பயிற்சிகள், நார் சத்து உள்ள உணவு முறைகளை மேற்கொண்டாலே போதுமானது. இதைத் தான் என்னிடம் எடை குறைப்பிற்காக வருபவர்களுக்கும் கற்றுத்தருகிறேன்.

**உங்களின் பயிற்சியின் மூலம் இதுவரை எத்தனை பேர் பயனடைந்துள்ளனர்?**

என்னிடம் கற்க வரும் பெரும்பாலோனோரை நான் நேரில் சந்தித்தது கூட கிடையாது என்பது தான் உண்மை. எடை பருமனாக தோற்றமளிப்பவர்களின் வேதனையை நானே அனுபவித்துள்ளேன். என்னுடைய எடை குறைப்பினை நான் நேரலையில் நேரம், தேதி உட்பட அனைத்தையும் பதிவு செய்து 'யூ டியூபில்' பகிர்ந்தேன். அதனை பார்த்து தான் உலக அளவில் சுமார் 3.5 லட்சம் பேர் இந்த சேனலை பின் தொடர்கின்றனர். கனடாவை சேர்ந்த நண்பர் ராஜூ என்னுடைய ஆலோசனையின் மூலம் 45 கிலோ வரை எடையை குறைத்துள்ளார். இதே போல் மற்றவர்களின் எடை குறைப்பையும் முதல் நாளில் இருந்தே 'ஜிஞிஷி விஷீமீ வீஸ்ணீமீ வீஷீஸீ' என்ற முகநூல் பக்கத்தில் தினமும் அவர்களின் எடை மற்றும் தினசரி தோற்றத்தை தேதி, நேரம் உட்பட்ட விபங்களுடன் பதிவு செய்கிறோம். இதனை பார்ப்பவர்களுக்கு ஒரு தன்னம்பிக்கையை ஏற்படுத்தவும், அவர்களை உற்சாகப்படுத்தவும் இம்மாதிரியான உத்திகளை பயன்படுத்துகிறோம். இதற்கு கை மேல் பலனாக இதனை பார்க்கும் மற்றவர்களும் எடை குறைப்பில் அதிக கவனம் செலுத்தி அதில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

**இந்த பயிற்சியை மேற்கொள்பவர்கள் கடைபிடிக்க வேண்டிய சாப்பாட்டு முறை (Diet) என்ன?**

இங்கே பிரச்சனை என்னவெனில் (Diet) என்றால் என்னவென்றே தெரிவதில்லை. உதாரணமாக எண்ணெய் பொருட்களை சாப்பிடுவதாலும், கொழுப்பு சத்துள்ள உணவுகளை சாப்பிடுவதால் மட்டுமே உடல் எடை கூடுவதாக எடுத்துக்கொள்கிறார்கள். உண்மையில் அது மிகப்பெரிய தவறு. (Diet) என்பது நம் தேவைக்கு அதிகமான உணவு பொருட்களை குறைத்துக் கொண்டாலே போதுமானது. 'கார்போ ஹைட்ரேட்' சார்ந்த உணவு பொருட்களை அதிகம் எடுப்பதாலேயே 'திகிஜி' எனப்படும் உடல் பருமன் ஏற்பட முக்கிய காரணம். நாங்கள் கலோரிகளின் அடிப்படையில் தினசரி உணவை எடுத்துக்கொள்ள பரிந்துரைக்கிறோம். சராசரியாக ஒரு நபருக்கு 2400 கலோரிகளே போதுமானது. ஒரு நாளைக்கு நமது சாப்பாட்டில் 7000 க்ளோரிகளை அதிகமாக எடுத்தால் ஒரு கிலோ எடை கூடும். இது அறிவியல்பூர்வமான உண்மை. அதேபோல் நமது உணவில் கண்டிப்பாக தினசரி 'புரோட்டின்' எனப்படும் புரதச்சத்து சேர்த்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக உங்கள் எடை 80 கிலோ என எடுத்துக் கொண்டால் 80 கிராம் புரதம் உங்கள் உணவில் எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் யாருமே அதை பின்பற்றுவதில்லை. எனவே எங்களிடம் வருபவர்களுக்கு அவர்களின் உடல் எடைக்கு ஏற்றவாறு ஆலோசனைகளை வழங்குவோம்.

**இரவு நேரங்களில் (Night Shift) வேலை செய்வதற்கும் உடல் எடை கூடுவதற்கும் தொடர்பு உண்டா..?**

இரவு நேரங்களில் வேலை செய்வதால் மட்டுமே உடல் எடை கூடிவிடும் என்று சொல்ல முடியாது. அதனை யாரும் அறிவியல் பூர்வமாகவும் யாரும் இன்று வரை நிரூபிக்கவில்லை. இதையெல்லாம் ஒரு சாக்கு போக்காக நமது மக்கள் கூறிவருகின்றனர் அவ்வளவு தான். உடல் எடை கூடுவதர்க்கு இதுவும் ஒரு காரணமாக வேண்டுமானால் இருக்கலாம். முறையான உடல் உழைப்பும், நடை பெயர்ச்சியும் செய்தாலே நமது உடல் எடையை கட்டு கோப்பாக வைத்துக்கொள்ள முடியும்.

**இந்த பயிற்சியை பாதியில் விடுவதாலோ அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தாலோ குறைந்த எடை கூடிவிடும் என்கிறார்களே..? உண்மைதானா?**

இது முழுக்க முழுக்க நம் மக்களின் மனநிலை. இதே கேள்வியை நான் உங்களிடத்தில் திருப்பி கேட்கிறேன்.. எதனால் எடை கூடுகிறது..? சரியான உணவு பழக்கமும், முறையான உடல் உழைப்பும் இல்லாத காரணத்தால் தான் உடல் எடை கூடுகிறது. சரியான உடல் உழைப்பும், உணவுப் பழக்கத்தையும் பின்பற்றாமல் நமது எடை மட்டும் அப்படியே இருக்க வேண்டும் என்பது எந்த விதத்திலும் நியாயம் இல்லை.

**உங்களின் எதிர்கால லட்சியம் தான் என்ன..?**

உடல் எடையை குறைப்பதற்காக மக்கள் பல வழிகளை பின்பற்றுகிறார்கள், அதற்காக பல லட்சங்களை செலவு செய்கிறார்கள். இதனை வைத்து நிறைய ஏமாற்று வேலைகள் நடக்கின்றன. அடிப்படையில் நாம் ஒரு உண்மையை புரிந்து கொள்ள வேண்டும், நமது முன்னோர்கள் வீட்டுக் சென்ற உணவு முறைகளை பின்பற்றினாலே நமது உடலையும், எடையையும் ஆரோக்கியமானதாக வைத்துக்கொள்ள முடியும். கால மாற்றத்தின் காரணமாக நாம் மறந்து போன உணவு முறைகளை மீண்டும் அவர்களிடத்தில் கொண்டு செல்வதின் மூலம் ஆரோக்கியமான உடலையும், வளமான வாழ்வையும் அனைத்து மக்களிடத்தில் கொண்டு செல்வதற்கான முயற்சியில் இறங்க இருக்கிறோம். மக்கள் இதனை பின்பற்றினால் உடல் பருமன் என்ற பிரச்சனையே வராது. மொத்தத்தில் உடல் எடையை குறைக்கிறேன் என கூறிக்கொண்டு யாரும் பணத்தை வீணாக்க கூடாது என்பதே எங்களின் நோக்கம்.

உடல் எடையை குறைக்க நினைக்கும் பலரின் நம்பிக்கை நட்சத்திரமாய் ஜொலிக்கிறார் விஜய் சங்கர். தன்னலமற்ற இந்த இளைஞரின் முயற்சிகள் வெற்றியடைய கனடா உதயன் நேயர்கள் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்து விடை பெற்றோம். விஜய் சங்கரின் 'யூடியூப்' லிங்க்

www.youtube.com/channel/UCeBWU9awHX-3WPR7chSCoE0g

**பேட்டி : அருண் கதாதரன்**

- மொன்ரியால் விண்ணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#52

"ஒருநாள் கணேசன் வீடு திரும்பியதும் விபூதி பிரசாதங்களை என்னிடம் கொடுத்தான். அம்மா நான் வாழப் போகிறேனம்மா. எனக்கு மெக்கானிக் வேலை பிடிக்கவில்லையம்மா. இன்னக்கி வாங்கின சம்பளத்தில் துணி, சட்டை வாங்கிட்டேன். உச்சிப்பிள்ளையார் கோயிலில் அர்ச்சனை செய்தேன். அப்பாவுக்கு தெரிந்தால், நாடகக் கம்பெனிக்குப் போகக்கூடாது என்று திட்டுவார். என்னை ஆசிர்வாதம் செய்து அனுப்புங்கம்மா. நான் போய் நல்லபடி சம்பாதிப்பேனம்மா. என்னை அனுப்பி வையுங்கம்மா! என்று கெஞ்சினான் கொஞ்சினான். என் மனம் நெகிழ்ந்து விட்டது. கணேசன் நாடக உலகை வெறுத்து விட்டு தொழில் செய்து சம்பளமும் பெற்றிருக்கிறான். ஆகவே இனி குடும்பம் வறுமையில் வாட வேண்டாம் என நினைத்தேன். அந்த ஆசை நிராசையாகிவிட்டது. ஆனால், அவன் "நான் வாழப் போகிறேன்" அம்மா என்றான்.

அதற்கு பெற்றதாய் தடையாக இருக்க முடியுமா? ஆசி கூறி அனுப்பி வைத்தேன். இவ்வாறு இன்றைக்கு 62 ஆண்டுகளுக்கு முன் 1959 வெளிவந்த "பேசும் படம்" இதழில் நமது கலா நாயகனைப் பெற்றெடுத்த பெருமாட்டி அன்னை ராஜாமணி அம்மையார் அளித்திருந்த பேட்டியைப் பல வருடங்களுக்கு முன் வாசித்து கொண்டிருக்கும் போதே எனது மனசு எனும் பதிவேட்டில் "நான் வாழப் போகிறேன்" தலைப்பு பதிவாகிவிட்டது. அன்றிலிருந்து நடிகர் திலகம் பற்றிய வரலாற்றுத் தகவல்களையும் வளர்ச்சியையும் உழைப்பின் மீது அவர் கொண்டிருந்த உற்சாகமான பற்றுதலையும் கவனித்து வந்தேன். எவன் ஒருவன் தான் விரும்பியதைத் தொழிலாக அமைத்துக் கொண்டு விடாமுயற்சியுடனும் கடமையுணர்வுடனும் உழைத்துக் கொண்டு வாழ்வில் போராடத் தொடங்குகிறானோ அவன் நிச்சயம் சிகரங்களைத் தொடுவான் என்பதற்கு நமது சிவாஜி ஐயா அவர்களது வாழ்க்கை வரலாறாகிவிட்டது. அவருடைய வாழ்க்கையில் கடந்து வந்த - நடந்து வந்த ஒவ்வொரு தடைக்கற்களும் வெற்றிப் படிகளாகும்.



வாழ்க்கையில் முன்னேறத் துடித்து உழைக்கும் வெறியுடனும் பசியுடனும் புறப்பட்டு வருபவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் மனச்சோர்வுகளை அகற்றி உற்சாகம் தருவதற்கு நடிகர்திலகம் அவர்களது கலையுலக பயணம் தெம்பு தருமாகில் இக்கட்டுரைத் தொடர் அர்த்தமுள்ளதாகிறது.

எங்கள் தலைமுறையில் நாம் வாழும் காலத்திலேயே தமிழர்கள் பெருமைப்பட்டுக் கொள்ளும் விதத்தில் தலைநிமிர்ந்து நடக்க வைத்த ராஜ புருஷர்களுள் இருவரை இங்கு எந்தத் தமிழ் மகனும் நினைத்து நினைத்து வியப்பும் புளகாங்கிதமும் அடையாமல் இருக்க முடியாது. ஒருவர் கலா புருஷர் நடிகர் திலகம். மற்றவர் சுதந்திரப் போராட்ட நாயகன் தலைவர். பிரபாகரன் அவர்கள்.

வெள்ளையனை வெளியேற்ற வேண்டும். இந்திய தேசத்தையே ஆங்கிலேய அடிமைச் சிறையிலிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்ற தேசிய சுதந்திர உணர்வு மிகுந்த குடும்பத்தின் தந்தையின் மகன் சிவாஜி கணேசன் அவர்கள். அதுமட்டுமல்லாமல் இந்திய தேசத்தின் சரித்திர புருஷர்களாக வேடமிட்டு நடித்து மக்கள் மனதில் தேசபக்தியையும், இனமான உணர்வினையும் - சுதந்திரத்தின் புனிதத்தையும் பதியம் போட்டவர் நடிகர் திலகம் அவர்கள்.

தமிழனுக்கென்று ஒரு நாடு வேண்டும். அதன் பெயர் தமிழீழம். அந்த மண்ணை சூறையாடி அபகரித்து அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து மீட்டெடுப்பதற்கான சுதந்திரப் போரின் வேராக - விழுதாக - வேங்கையின் மைந்தனாக தோன்றி "விடுதலைப்புலிகள்" என்ற வீரமிகு சுதந்திரப் போராட்டக் குழுவின் தலைவனாக பல களங்களில் எதிரிகளைப் புறங்காண வைத்து.. இதோ சுதந்திர தமிழீழத்தை அண்மித்துவிட்டோம் என உலகத் தமிழர்கள் அனைவரும் ஒருமித்து குரல் எழுப்பி இனமான உணர்வுமிகு தமிழர்களாக உலக அரங்கில் ராஜநடை போட வைத்துக் கொண்டிருக்கும் தமிழ் தலைவர் வே பிரபாகரன் அவர்களையும் இந்த நூற்றாண்டில் சந்திக்கும் வாய்ப்பு பெற்றவர்கள் நாம்.

நடிகர் திலகம் வீரபாண்டிய கட்டபொம்மனாகவும் - கப்பலோட்டிய தமிழன் வ உ சி யாகவும் - திருப்பூர் குமரனாகவும் - ராஜராஜசோழனாகவும் உருவெடுத்து தமிழர்களின் வீரத்தையும் - தாய்மண் பற்றையும் எமது தலைமுறைக்கு உணர வைத்தார்.



"..வருங்காலத் தலைமுறைகள் வரலாற்றைப் புரட்டுங் கால் வடிகாலாய் விளங்கிடுமே நீ நடித்த பாத்திரங்கள்... எனப் பாடுவது தான் நிஜமான வரலாறாகி விட்டது.

ஆகவே இந்த நூற்றாண்டின் இருவேறு திலகங்களாக இவ்விரு தமிழ் புருஷர்களையும் தமிழ் மண்ணுக்குத் தந்து எமது இனத்தின் மேன்மையை உலகறிய செய்த தமிழன்னையை வணங்குவோம்.

இந்திய தேசிய நீரோட்டத்தில் சிவாஜி கணேசன் என்கின்ற இந்தியக் குடிமகனின் தேசிய உணர்வு கலந்திருந்தாலும் இன மான மொழி உணர்வால் கலாச்சார பண்பாட்டாலும் அவர் திரிபுபடாத பச்சைத் தமிழர் பிறப்பால் வீரமிக்க மறவர்.

ஆனபடியால் தான் ஒளிவுமறைவின்றித் தனக்கேயுரித்தான கம்பீர தோரணையுடன் தமிழிழத் தலைவரின் வீரத்தை மனம் திறந்து மெச்சியவர். அவருடன் ஆத்மார்த்தமாக உரையாடினால் தான் அவரது தமிழ் உணர்வு பொங்கும்

(தொடர்ச்சி 18ம் பக்கம்)




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
roted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

*(சென்ற வார தொடர்ச்சி...)* *(அத்தியாயம் 18)*

## கல்கியின் பொன்னியின் செல்வன்


# வந்தியத்தேவனின் பழையாற்றுப் பயணம்

பின்னர் குந்தவையிடம் விடை பெற்று தன் தமையன் ஈசானப் பட்டர் வீட்டிற்குச் சென்றான். போகும் வழியில் கோயில் கோபுர வாசல் வழியாக சென்றான். அப்பொழுது ஈசான பட்டர் சுவாமி சந்நிதியில் அடியார்களுடன் நிற்பது தெரிந்தது. சிவனைப் போற்றும் இத் திருவிழாவில் கிருக்ஷ்ணனைப் போலவும், பலராமனைப் போலவும் வேடம் போடுபவர்கள் ஏன் இங்கே வந்தார்கள் என்று எண்ணும் போது, ஈசானப் பட்டர் ஆழ்வார்க்கடியானைக் கண்டு, அவசரமாக வந்து திருமைலயின் கைகளைப் பிடித்து 'நீ இங்கே வராதே நீ சிவநிந்தனை செய்யும் சமயப் பிரிவுடன் பெரிய மகாராணியின் முன் பேசியதை என்னால் சகிக்க முடியவில்லை வேண்டுமானால் வீட்டுக்குப் போய் உன் பெரிய வயிற்றை நிரப்பிக்கொள். கோயிலுக்குள் வராதே' என்றபடி கதவைப் படார் என்று சாத்தினார். திருமலை சிவப்பட்டர் வீடு வந்து அவர் மனைவி அளித்த பிரசாதத்தை உண்டு தன் பெரிய வயிற்றை நிரப்பி விட்டு திண்ணையில் படுத்துறங்கினார். அப்போது தான் வந்தபோது நடந்த சம்பவத்தை நினைவுபடுத்தினான். ஓரு குதிரை என் முன்னேஓடிச் சென்றதே அதில் ஒரு சிறிய பிள்ளை குதிரையுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான். அவனைத் தொடர்ந்து நான்கு குதிரையில் ஆட்கள் அவனைத் துரத்திச் சென்று பிடித்தனர். யாரைத் தேடினார்கள்? காஞ்சியில் இருந்து வந்த வாலிபனாக இருக்கமுடியுமா? கிருஷ்ண மாயநதி திருவிழாவில் கண்ணன் வேடம் போட்டவன் அந்த வாலிபனின் உருவம் போன்றே இருந்தது.

அப்போது ஈசானபட்டர் வீட்டிற்கு வந்தார். திருமலை! திருமலை என்று அழைத்தார். திருமலையோ நித்திரை போல் பாசாங்கு செய்தான். திரும்பிச் சென்ற ஈசானபட்டர் மீண்டும் திருமலையிடம் திரும்பி வந்தார். 'தம்பி நான் கோபத்திற்கு இடம் கொடுத்துவிட்டேன் ஒன்றும் வருத்தமில்லையே?' என்றார். அதற்கு 'இல்லவே இல்லை அண்ணா' என்றான். 'அப்படியானால் நீ இங்கேயே இரு உச்சிக்கால் பூசையை முடித்துக் கொண்டு வருகிறேன்' என்றார். அவர் சென்றபின் திருமலைக்கு சந்தேகம் வந்தது. எழுந்து சென்று செங்குன்றுகள் சூழ்ந்த மேற்றிசை கோயிலை இரண்டு மூன்று தடவை சுற்றிவந்தார். அப்பொழுது ஈசானப்பட்டர் மூன்று பக்கமும் சுற்றிப் பார்த்துவிட்டு வெளியே வந்தார். அவர் பின்னால் இன்னொரு மனிதனும் பின்னால் வந்தார். இவன் யார்? கம்சன் வேடம் பூண்டவன் போல் இருக்கிறதே! இவனைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும் இதற்காகத்தான் தம்பி இத்தனை கோபக் கொந்தளிப்போ? அவ்வேளை அரண்மனைப் படகு ஒன்று அங்கு வர அதில் இருவரும் ஏறிக் கொண்டனர். படகு ஆயத்தமானது. கூட வந்த அந்த வாலிபன் திரும்பிக் கரைப் பக்கம் பார்க்க, அவன் யார் என்று ஆழ்வார்க்கடியான் கண்டு கொண்டான். வீர நாராயணபுரத்தில் கொள்ளிடத்து படகில் கண்ட அந்த வீர வாலிபன்தான் இவன் எங்கே செல்கிறான்? யாரைப் பார்க்க செல்கிறான்? எந்தச் செய்தியுடன் வந்திருக்கிறான்? என்று நான் கண்டுபிடித்தே ஆகவேண்டும். என்று எண்ணி சோழ மாளிகையருகில் பூட்டப்பட்டிருந்த முதல் மந்திரி அநிருத்தர் மாளிகையருகில் நுழைந்தார். பாண்டிய நாட்டின் இராஜாங்க நிர்வாகத்தை செப்பனிட்டமைக்க அவர் மதுரை சென்றிருந்தார். அவருடைய குடும்பத்தார் தஞ்சாவூரில் இருந்தனர். அதனால் அநிருத்தரின் மாளிகை பூட்டப்பட்டிருந்தது. உடனே அங்கு செல்ல காவலர்கள் கதவுகளைத் திறந்து ஆழ்வார்க்கடியாரை உள்ளே விட்டனர். பின்பு ஆழ்வார்க்கடியான் கேட்டபடி காவலர்கள் வெளிப்புறமாக கதவுகளைச் சாத்திப் பூட்டினர். ஆழ்வார்க்கடியான் குந்தவைதேவியின் அரண்மனையை ஒட்டி ஒளிந்திருந்தான். அப்போது ஈசானப்பட்டரும், வந்தியத்தேவனும் கரையை வந்து இறங்கினர். மாளிகைத் தோட்டத்தில் பளிங்குக் கல் மேடையில் குந்தவை தேவி அமர்ந்திருந்தாள். குந்தவையை நோக்கி ஈசானப்பட்டர் நடக்க வந்தியத்தேவனும் தொடர்ந்தான். குந்தவையின் இருப்பிடம் வந்ததும் குந்தவை எழுந்து நிற்க வந்தியத்தேவனோ குந்தவையின் முக மலர்ச்சியைக் கண்டு கண் கொட்டாமல் பார்த்தபடி நின்றான். இத்தனை காலமும் தான் உயிர் வாழ்வது இந்தவொரு சந்திப்பிற்காக என்பதை ஏதோ ஒரு சக்தி உணர்த்தியது. இந்த சக்திதான் என்ன என்பதையும் அந்தக் கணமே தெரிந்து கொண்டான். தங்கள் ஒருவரிடம் உள்ள குறையை இன்னொருவர் இட்டு நிரப்ப முடியும் என்று நம்பினர். இவ்வாறு மனம் ஒன்று சேர்ந்த எம்மை உலகில் எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது என்று உறுதியாக உணர்ந்தான். இவையெல்லாம் ஒரு பார்வையாலேயே பரிமாறப்பட்டது. இந்த கல்கி ஆசிரியரின் எண்ணங்களையும், எழுத்துக்களையும் தாண்டி எடுத்து வடிக்க என்னால் முடியவில்லை. அதனால் கல்கியின் பொன்னியின் செல்வனை அவர் எழுத்து வடிவிலேயே நானும் தருகிறேன். கல்கிக்கு என்றும் மனதில் ஒரு ஓ போட்டுக்கொள்கிறேன். இறந்தும் வாழும் மனிதர்கள் என்று சொல்வது இதுதான் என்று என் உணர்வு சொல்கிறது.

கண்ணும் கண்ணும் சந்தித்த பார்வையில் கண்டு கொண்ட சுக உணர்ச்சியில் இருந்து விடுபட அவர்களால் முடியவில்லை. அப்பொழுது ஈசானப்பட்டர் தன் தொண்டையைக் கனைத்தார் உடனே குந்தவை விழித்துக் கொண்டாள். 'நீர் என்னை தனிமையில் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது உண்மையா? என்றார். அந்தக் குரலின் கடுமையையும், அதிகாரத் தொனியையும் கேட்டு வந்தியத்தேவன் நிமிர்ந்து, நீர் யார் என்று தெரிந்தால் உமது கேள்விக்கு நான் பதில் சொல்லலாம். என்னைத் தவறான இடத்திற்கு அழைத்துவந்ததே இந்த ஈசானபட்டர். நான் பார்க்க விரும்புவது சோழர் குலத்தின் மங்காமணி விளக்கை. சுந்தர சோழ மன்னனின் செல்வத்திருமகளை, ஆதித்த கரிகாலருக்குப் பின் பிறந்த சகோதரியை, அருள்மொழிவர்மனின் அருமைத் தமக்கை இளைய பிராட்டி குந்தவைதேவியை' என்றான்.

குந்தவை புன்னகை பூத்து, 'இத்தனை பெருமையையும் தாங்கி நிற்க முடியாமல் தாங்கி நிற்பவள் நான் தான். குடந்தை சோதிடர் வீட்டிலும், அரிசிலாற்றங்கரையிலும் நீங்கள் பார்த்த அந்தப் பெண்ணும் நான்தான். அங்கு மரியாதைக் குறைவாக நடந்து கொண்டவளும் நான்தான். மறுபடியும் நாம் சந்திப்போம் என்று நினைக்கவில்லை'. அதற்கு வந்தியத்தேவனோ 'தேவி அன்றிலிருந்து ஒரு கணமும் உங்கள் எண்ணம் என் மனதைவிட்டு அகலவில்லை. சோழ நாடு பெருமைக்குரியது அத்தனை பல அபாயங்களும் உள்ளது, நீர்ச் சுழலை விட இச் சுழல் அபாயமாக இருந்தது எனக்கு' அதற்கு, 'நீர் எப்படி நீர் சுழலில் அகப்பட்டுக் கொண்டீர்' என்று கேட்டாள் குந்தவை. அதற்கு வந்தியத்தேவன், தான் எப்படி தஞ்சை அரண்னையில் இருந்து சேந்தன் அமுதனின் வீட்டிற்கு காயப்பட்ட கந்தமாறனுடன் வந்து பின் அங்கிருந்து சேந்தன் அமுதனை வழிகாட்டியாகக் கொண்டு குதிரை மீது தப்பி இந்த பழையாறை வந்த கதையைக் கூறினான்.




'தங்கள் அருமைச் சகோதரர் ஆதித்த கரிகாலனின் ஓலையுடன் தஞ்சைக் கோட்டை சென்று சக்கரவர்த்தியிடம் ஓலையைக் கொடுத்துவிட்டு அங்கு தங்கியிருந்தேன். அப்பொழுது சின்னப்பழுவேட்டரையர் என்னை ஒற்றன் என்று குற்றம் சுமத்தி என்னைப் பிடிக்க வீரர்களை அனுப்பினார். வந்த காரியம் முடியமுன் அவரிடம் அகப்பட விரும்பவில்லை. தஞ்சையில் நான் தங்கியிருந்த இருந்த அந்த வீட்டுச் சிறுவனை அழைத்துக் கொண்டு போனேன். குடமுருட்டி ஆறு வந்ததும் அந்தச் சிறுவன் சேந்தன் அமுதனைப் பார்த்து நான் இங்கே இறங்கிக் கொள்கிறேன் நீ குதிரையை வீட்டிற்கு கொண்டு போ உன்னை நான் என்று நினைத்து துரத்தி வரும் வீரர்கள் வருவார்கள் பின்னர் ஏமாற்றம் கொள்வார். என்னைப்பற்றிக் கேட்டால் ஆற்றில் மூழ்கிவிட்டான் என்று சொல்' என்றேன் அதற்கு அவன், 'நான் பொய் சொல்ல மாட்டேன் நீங்கள் ஆற்றில் மூழ்கினால் சொல்வேன்' என்றான். அதனால் நான் ஆற்றில் மூழ்கி நீர் சுழலில் தத்தளித்தேன் ஒருவாறு அதிலிருந்து மீண்டுஎன்னை அடையாளம் கண்டுகொள்ளாதிருக்க 'கிருஷ்ண போற்றி' நாடகக்காரருடன் சேர்ந்து, இன்று வேடம் தரித்து ஈசான பட்டரிடம் சென்று, அவர் உதவியோடு இங்கு வந்தேன். இதோ உங்கள் தமையனாரின் ஓலை எத்தனையோ தடையைத் தாண்டி இதை உங்களிடம் ஒப்படைக்கிறேன் என் மனம் பூரித்து நிற்கிறது. என்றபடி ஓலையைக் கொடுத்தான். அதை வாங்கிப் படித்த குந்தவையின் முகம் மலர்ந்து பிரகாசிக்க வந்தியத்தேவனைப் பார்த்து 'இனி என்ன செய்வதாக உத்தேசம்?' என்று கேட்க அவனும் நான் ஊர் திரும்புவேன் என்றான். இளவரசர் இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறார் என்று தெரியுமா? உம்மிடம் அந்தரங்க வேலை எதையும் நம்பிக் கொடுக்கலாம் என்று எழுதியிருக்கிறார். அதன்படி நீர் நடந்து கொள்ளலாம் பழம் பெருமை பேசும் வானர் குல மரபில் ஒன்றை ஒப்புக்கொண்ட பிறகு பின்வாங்கமாட்டார். ஏன் பெண்ணின் ஏவலைச் செய்வதா என்று யோசிக்கின்றீரா? அல்லது என்னைப் பிடிக்கவில்லையா? என்றாள் குந்தவை.

***(தொடரும்...)***

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

*(17ம் பக்கத் தொடர்ச்சி)*

## *சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்*

உள்ளத்து உணர்வுகளை அறிய முடியும்.

இந்த அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியதால், ஈழத்தமிழர்களின் தியாகத்திற்கும் வீரத்திற்கும் அவருள்ளம் எவ்விதம் தலை வணங்குகிறது என்பதை உணரமுடிந்தது. ”உங்க தலைவனால் தான் அய்யா தமிழனுக்கு இப்போ பெருமை” என்று மகிழ்ச்சி பொங்க கூறியவர்.

”நான் வாழப்போகிறேன் அம்மா” என்னை ஆசீர்வதித்து அனுப்புங்கள் என்று தனது அன்னையிடம் விடைபெற்று தனக்குப் பிடித்த நடிப்புக் கலையை தொழிலாக விரித்துக் கொண்டு வாழ்க்கையை ஜெயித்தவரை, வாழ்ந்து காட்டியவரை - இந்திய தேசத்தின் ஒப்பற்ற கலைஞரை - உலக அரங்கில் ஒப்பீடு செய்யப்பட்டு உயர் விருது பெற்ற கலா புரு'ரைத் தமிழினத்தின் சொந்தக்காரராய் பெற்றதையிட்டு ஒவ்வொரு தமிழரும் தலையை நிமிர்த்திக் கொள்வோம்.

இன்றைய தமிழகத்தில் தாய்மொழி கல்வியைச் சட்டம் மூலம் அமுல்படுத்துவதற்கே நீதிமன்றம் வரை போய் அல்லாடிக் கொண்டிருக்கிற நிலையில்... மிகவும் எளிதாகவும் அதே நேரத்தில் அனைத்து தமிழர்களையும் தமிழ் மொழியை அழகாக பேசி பழக வைத்த படிக்காத மேதை நமது நடிகர் திலகம் அவர்கள்.

தமிழ் பாடல்களை மட்டுமே முணுமுணுத்துக் கொண்டிருந்த ஒரு சில கர்நாடக சங்கீத ரசிகர்களை மட்டுமல்லாது ஒட்டுமொத்தமான தமிழர்களையுமே தமிழ் வசனங்களை உச்சரிக்கவும்... மனப்பாடம் செய்யவும் வைத்த தமிழ் ஆசான் சிவாஜி அவர்கள்.

1952 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்த ஒவ்வொரு தமிழனும் சரி, அதற்கு முந்தைய காலத்து தமிழனும் சரி இன்றும் கூட தமிழ் மொழியை உச்சரிக்கும் போது “சிவாஜி“ என்கின்ற கலைஞனை தமிழ்மொழி ஆசானாக ஒரு கணமாவது மனதில் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

எனவே தான் தமிழ் மொழி பேசப்படும் வரை சிவாஜி அவர்களும் நினைக்கப்படுவார். ...நடித்துக் கொண்டு இருக்கும் போதே இறக்கின்ற பாக்கியம் எனக்கு கிட்ட வேண்டும்” என்று விரும்பியவர் நடிகர் திலகம். அவருடைய விருப்பம் பொய்யாகிப் போனது. காரணம்.. நடிக்கவும்.. தமிழ் மொழியை அழகாக உச்சரித்துப் பேச விரும்புகிற ஒவ்வொரு தமிழனிடமும்.. அந்தக் கலா புருஷர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

“சிவாஜி கணேசன்“ என்பவர் ஒரு நடிப்புக் கலைஞன் மட்டுமல்ல.. ஒரு நூற்றாண்டின் தமிழ் நாடக - சினிமாவின் அகராதி. தமிழ்நாட்டின் கலையுலகத் திலகமே உம்மைப் பற்றிப் படிக்கவும் - எழுதவும் - தேடல் செய்யவும் ஆர்வம் பொங்கியது நீர் பேசிய தமிழ் கேட்டு இன்புற்றதால் தான். எனவே நீரும் எனக்கு ஒரு தமிழ் ஆசானாகிவிட்டீர். தமிழ் ஆசானே உனக்கு என் நமஸ்காரங்கள்.

படப்பிடிப்பு மதிய போசன இடைவேளைக்கு நிப்பாற்றப்படும் போது, சிவாஜி ஐயாவுக்கு உணவு அவரது வீட்டிலிருந்தே வரவழைக்கப்படும். சில சமயங்களில் வெளியூர் படப்பிடிப்பானால், தயாரிப்பு நிறுவனம் உணவு - டிபன் ஏற்பாடு செய்வார்கள்.

ஒரு சமயம் “பட்டாக்கத்தி பைரவன்“ படப்பிடிப்பு இடைவேளையின் போது பரிமாறப்பட்ட தயிர் பச்சடியில் வெங்காயம் சேர்க்கப்பட்டிருந்தது.

உடனே அந்தப் பணியாளரைப் பார்த்து வெங்காயம் சேர்க்கப்பட்ட பச்சடியை நீக்க சொன்னார். ஏன் நீக்கச் சொன்னார். விடை அடுத்த இதழில் தொடரும்..!

# மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் படைத்த நாவன்மைக் களம்:

## ரொறன்ரோவையும் - கோலாலம்பூரையும் இணைத்த கனடா உதயன் இதழ்







கோலாலம்பூர், ஜூன் 28:

உலகின் மூத்த மொழியாம் அன்னைத் தமிழை தாய்மொழியாகக் கொண்ட தொல்குடி என பெயர்பெற்ற தமிழர்கள் புலம் புலம் பெயர்ந்து வாழும் கோலாலம்பூர் திருநகரையும் டொரொண்டோ பெருநகரையும் இணைக்கும் விதமாக மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவச் செல்வங்கள் பங்கு பற்றிய "நாவன்மைக் களம்" என்னும் நிகழ்ச்சியை கனடாவில் முதல் தர இணைய ஏடாகவும் ஈழத் தாயின் இதயத் துடிப்பைப் பிரதிபலிக்கும் வாரப் பத்திரிகையாகவும் ஒருசேர உலா வருகின்ற உதயன் இதழ் ஜூன் 27 ஞாயிறுக் கிழமை 7:00 மணியளவில் நடத்தியது.

வாரத்தின் முதல் நாள் என்றாலும் மாதத்தின் கடைசி ஞாயிறான இந்நாளில் மலேசியாவிற்கு பொழுது சாயும் மந்தார அந்திவேளை இது என்றால் அதே ஏழு மணிப் பொழுதோ கனடாவிற்கு காரிருள் விலகி காலைக்கதிரவனுடன் பொழுது புலரும் விடியல் வேளையாகும்.

நிகழ்ச்சி நெறியாளர்களான கலைமதி இரமேஷும் உகனேசுவரி முத்துவும் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள் என்பதால், காலம் தப்பாமல் மலேசியத் தமிழ் வணக்கப் பாடலுடன் நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்து, உதயன் ஆசிரியர் ஆர். நாகமணி லோகேந்திரன் அவர்களை தொடக்கவுரை ஆற்ற அழைத்தனர்.

உதயனை உருவாக்கி வெள்ளி விழாவை எட்டிவிட்ட அதன் தலைமை ஆசிரியர் திருவாளர் ஆர். என். லோகேந்திரலிங்கம், தான் தாளையும் கோலையும் ஏந்தி எழுந்தாளராகி பொன்விழா ஆண்டை எட்டுகிறேன் என்ற பெருமிதத்தை வெளிப்படுத்தி இனம்புரியாத இன்பப் பெருக்கோடும் மட்டுப்படாத புதுமை மிடுக்கோடும் இந்த நாவன்மைக் களத்தைத் தொடக்கி வைத்து இயங்கலைவழி ஆற்றிய உரை, அதில் இணைந்திருந்தோரை உற்சாகப்படுத்தியது என்றால் இளம் பேச்சாளர்களின் உள்ளத்தே ஊக்கத்தை ஊற்றெடுக்க வைத்தது.

தன்னுடைய பத்திரிகைப் பயணத்தில் இந்த நாள் ஓர் இனிய நாள் என்று குறிப்பிட்டதுடன், பாடகர் ராஜா தலைமையிலான ஏற்பாட்டுக் குழுவினருக்கு நன்றியும் தெரிவித்தார். மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்க ஒருங்கிணைப்பில், கவிஞரும் தமிழ் இலக்கிய - இலக்கணப் பயிற்றுநருமான "நினைவில் வாரும்" சீனி- நைனா முகம்மது அவர்கள் இயற்றிய


காப்பியனை ஈன்றவளே
காப்பியங்கள் கண்டவளே
கலைவளர்த்த தமிழகத்தின்
தலைநிலத்தில் ஆள்பவளே

என்று தொடங்கும் மலேசியத் தமிழ் வணக்கப் பாடலைக் கேட்டு பெருமகிழ்ச்சியை வெளிப்படுத்திய லோகேந்திரலிங்கனார், ஈழம் எங்களுக்கு தாயகம் என்றால் தமிழகத்தை நாங்கள் தமிழினத்தின் தலைநிலமாகக் கொள்கிறோம் ஈழத்தை அடுத்து தமிழும் தமிழரும் சிறப்பான இடத்தில் கொலு கொண்டுள்ள நாடு மலேசியா என்பதாலும் இன்னும் பிற காரணங்களாலும் அந்த மண்ணின்மீதான ஈர்ப்பும் என்னிதயத்தில் எந்நாளும் ஈரப்பத்தத்துடன் இருக்கும் என்று தமிழீழம், தமிழகம், மலையகம், கனடா ஆகிய நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களை இணைத்துப் பேசி தன்னுரையை இன்னுரையாக்கி நிறைவு செய்தார்.







அடுத்து உரையாற்றிய ஐந்து மாணாக்கர்தம் அடிப்படைக் கருத்தும் ஏறக்குறையை ஒரு புள்ளியில் சந்தித்து நின்றன. அதற்கான காரணம் அவர்கள் பேசிய தலைப்பு.

ஆனாலும், அவரவரும் தத்தம் கல்விப் பயணத்தை தற்போதைய கொரோனா பருவத்தில் மேற்கொண்ட வகையில் தாங்கள் எதிர்கொண்ட சவாலையும் கிட்டிய பட்டறிவையும் சுவை குன்றாமல் இனிமைசேர எடுத்துரைத்தனர்.

**நக்கீரன்**

பகாங் மாநிலம், லஞ்சாங் தோட்ட தமிழ்ப் பள்ளி மாணவர் மாதேஷ் ராவ் சாம்பமூர்த்தி முதலில் பேசினார்.

மாணவர்களும் நண்பர்களும் புடைசூழ கல்வி கற்ற நிலை மாறி, பெற்றோரும் உடன்பிறந்தோரும் படைசூழ கற்க வேண்டிய தற்போதைய நிலை, உடலுக்கும் உள்ளத்திற்கு சோர்வை அளிக்கிறது. கையடக்கத் திரையில் அதிக நேரம் கண் பதிப்பதால் கண்ணயற்சி ஏற்படுகிறது. ஆனாலும், பல போட்டிகளில் கலந்து கொள்ளவும் விருப்பமான பாடங்களுக்கு அதிக நேரத்தை ஒதுக்கவும் முடிகிறது என்றார் மாதேஷ்.

அடுத்ததாக வந்த மாணவி கீதா சண்முகம். இவர், கெடா மாநிலம், கோல கெட்டில், மலாக்கோ..ப் தோட்ட தமிழ்ப் பள்ளியின் ஆறாம் ஆண்டு மாணவி.

பள்ளிகள் மூடப்பட்டு மாணவர்களைப் போலவே, தொழிற்சாலைகளும் சாத்தப்பட்டு பெரியவர்களும் வீட்டோடு முடங்கி இருப்பதால் வாழ்க்கை ஆற்று மீனைப் போல இன்றி, குளத்து காகிதக் கப்பலைப் போல ஆகிவிட்டதாக சொல்லாமல் சொன்னது இந்த பிஞ்சு உள்ளம்.

அப்பாவிற்கு அரசு வழங்கிய உதவித் தொகை உதவியுடன் விவேக கைப்பேசி வாங்கினாலும் அதைப் பயன்படுத்துவதில் அக்காளுக்கும் எனக்கும் சிக்கல் நேர்ந்தது அதனால் இணைய வகுப்பில் தடங்கலும் நேர்ந்தது என்றார் இம்மாணவி.

மூன்றாவதாக முகம் காட்டினார், சிலாங்கூர் மாநிலத்தைச் சேர்ந்த கோல சிலாங்கூர் ராஜ மூசா தோட்ட தமிழ்ப் பள்ளி மாணவி அஷ்வினா சந்திரசேகர்.

அன்றாட சீருடையும் பள்ளிப் பையும் கேட்பாரற்று கிடக்கின்றன. ஆசிரியரின் கண்டிப்பும் கண்காணிப்பும்தான் இல்லையென்றால் சக மாணவர்களின் கேலியும் கிண்டலும்கூட இல்லாது போயிற்றே? இது என்ன கல்விப் பயணம் என்று கேட்காமல் கேட்ட அஷ்வினா, மீண்டும் பள்ளி செல்வதே இலட்சியம் என்றும் பள்ளி விளையாட்டுத் திடலில் ஓட்டம் எடுப்பது துணைக் குறிக்கோள் என்றும் தன் எண்ணத் திரைக்கு ஒளி ஊட்டினார் இம்மாணவி.







4-ஆவதாக களமிறங்கியவர், நெகிரி செம்பிலான் மாநிலம் போர்ட் டிக்சன் தானா மேரா தமிழ்ப் பள்ளி மாணவி கிசாலினி பாலமுருகன் வீட்டு வாழ்க்கையே பள்ளி வாழ்க்கையாக மாறும்படி செய்துவிட்ட இன்றைய கொரோனா பருவத்தில், கணினி ஆளுமையில் நான் தேர்ந்துவிட்டேன் புலனத்தின்வழி பாடங்களை சமர்ப்பித்து ஆசிரியர்களிடம் நட்சத்திரப் புள்ளிகளைப் பெறுவதிலும் சீருடை இயக்கம் போன்ற புறப்பாட நடவடிக்கைகளிலும் அதிக அக்கறைக் கொள்வதாக தெரிவித்த இம்மாணவி, இணைய ஊடாக, அதிக நூல்களைக் கற்று வருவதாகவும் தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

நிறைவாக, ஐந்தாவது நாவன்மையாளராக அழைக்கப்பட்ட மாணவர் உலு பேராக் கெரிக் எஸ்.கே.கே. குழுவகத் தமிழ்ப் பள்ளியைச் சேர்ந்த சூர்யா கண்ணன்.

அவசரம் அவசரமாக புறப்பட்டு காலை 7:45 முதல் பிற்பகல் 2:00 மணிவரை என அதிக நேரம் பள்ளியில் செலவழித்த நிலை மாறி, குறைவான நேரத்தில் கணினிவழி பாடம் கற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. கணினியை இயக்குவது இயல்பாக எனக்குப் பிடிக்கும். இன்றைய சூழல் அதற்கு ஏதுவாக அமைந்துவிட்டது என்று சொன்ன சூரியா, கூகுள் செயலி எனக்கு இப்பொழுது மிகவும் பரிச்சயமாகிவிட்டது என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியின் இணை ஒருங்கிணைப்பாளரும் தேசிய இடைநிலைப் பள்ளி மேநாள் துணை முதல்வருமான திருமிகு பெ. இராஜேந்திரம் அவர்கள் நன்றியுரை ஆற்றும் முன்னம், மாணவர்களுக்கு பாராட்டுரை வழங்கினார் கவிஞர் - எழுத்தாளர் - பேச்சாளர் என்னும் முப்பரிமானம் கொண்டவரும் உதயன் இதழில் வாரந்தோறும் சிவாஜி கணேசனும் தமிழ் சினிமாவும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதி வருபவருமான மொன்றியல் வீணை மைந்தன்.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாகவே இணைந்து விடுவேன் என்று உதயன் ஆசிரியரிடம் வாக்கு கொடுத்திருந்த நான், அவ்வாறு செய்யாமல் கடைசி நேரத்தில்தான் இணைந்தேன். அந்த பரபரப்பில், ஒலிபெருக்கு சரியாக அமையாமல், அது எதிரொலித்தது.

நிகழ்ச்சியை தொழில் நுட்ப ரீதியில் நேர்த்தியாக கொண்டு செல்வதில் கண்ணும் கருத்துமாக இருந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளரும் ஒருங்கிணைப்பாளருமான பாடகர் ரவாங் ராஜாவை பாராட்டத்தான் வேண்டும்.

கனடா உதயன் இதழ், மலேசிய மண்ணில் படைத்த இந்த நிகழ்ச்சி செம்மையுற துணை நின்ற மற்ற இரு ஆசிரியர்களான தாட்சாயணி முத்து மாணிக்கம், அறிவிற்கரசி செல்வரசன், சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர் அனைவருக்கும் ஏற்பாட்டுக் குழுவினர் நன்றி தெரிவித்தனர்.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**



ஜீவன் முக்தி (பகுதி ) 117

# வாழ்க்கையின் லட்சியம் ஞானமடைதல்

*(சென்ற வார தொடர்ச்சி...)*

அந்த பிரதிபலிக்கின்ற பிரதிபிம்பத்தின் மூலமாகிய சூரியனைப் பார்த்து, அந்த மூலத்தோடு கலத்தல், ஆதிமூலத்தோடு கரைதல், அதைத்தான் ஞானமடைதல் என்று சொல்கிறோம்.

எதனுடைய பிரதிபலிப்பாக நான் என்கின்ற உணர்வு உங்களுக்குள் இயங்குகின்றதோ? அது எங்கிருந்து பொங்குகின்றதோ? எங்கிருந்து வருகின்றது? என்று ஆழ்ந்து உற்று நோக்கி, அதற்குள்ளே கரைவதுதான் வாழ்க்கையின் லட்சியம். அதைப் பார்த்து விட்டீர்களானால், எதற்காக இந்தக் கண்ணாடியை உருவாக்கினீர்களோ, எதற்காக அந்தப் பிரதிபிம்பம் உருவாகியதோ, அந்த லட்சியத்தை அடைந்து விட்டீர்கள்.
லட்சியத்தை அடைந்தபின், கண்ணாடியை உடைத்தால் தவறில்லை.
ஆனால் அதை அடையாமல் கண்ணாடி உடைக்கப்பட்டால், அதுதான் மிகப்பெரிய இழப்பு.

ஞானமடையாது உங்கள் சரீரம் கெட்டுப் போனால், அதைவிட பெரிய இழப்பு வேறு எதுவும் இல்லை. இதுதான் கொடுமையான இழப்பு. உடலெடுக்கும் முன்பே நீங்கள் செய்த பிரார்த்தனை. இடைக்காட்டுச் சித்தர்.
'நந்தவனத்தில் ஓர் ஆண்டி-- அவன் வேண்டி கொண்டு வந்தான் ஒரு தோண்டி. அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி' என்று பாடலைப் பாடியிருக்கின்றார்.

இடைக்காட்டுச் சித்தர் திருவண்ணாமலையில் வாழ்ந்த சித்தர். இடைக்காடர் என்ற பெயருக்கு, காடுகளின் இடையில் வாழ்ந்தவர் என்று பொருள். அவர் ஒரு பெரிய ஞானி. அவர் பாடியது மிகவும் அர்த்தம் பொதிந்தது. நந்தவனத்தில் ஓர் ஆண்டி என்று துவங்கியிருக்கிறார்.
இந்த உலகத்தில் நம்மைத்தான், நம் ஜீவனைத்தான், நந்தவனத்தில் ஓர் ஆண்டி என்று சொல்கிறார். பிறக்கும் முன்பே நீங்கள் செய்த பிரார்த்தனையால்தான் இப்போது இந்த உடலை எடுத்து வந்திருப்பதாகச் சொல்கிறார்.

அடுத்து, நாலாறு மாதமாய் குயவனை வேண்டி என்று சொல்கிறார். நாலாறு என்றால் பத்து மாதம். பத்து மாதம் பிரம்மாவை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி. இந்த உடலைத்தான் தோண்டி என்கிறார். வேண்டி, வேண்டி எடுத்துவந்த உடலை எதற்கு உபயோகப்படுத்த வேண்டுமோ, அதற்கு உபயோகம் செய்யாமல் வெறுமனே பணம், புகழ், வெளியுலக ஆடம்பரங்களிலேயே கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி' என்று சொல்கிறார்.
மிகப்பெரிய இழப்பு என்பது, எடுத்து வந்த உடலை, எடுத்து வந்த காரணத்திற்கில்லாமல், போட்டு உடைப்பதுதான் மிகப்பெரிய இழப்பு.
இப்போது வாழ்க்கையின் லட்சியமான ஞானமடைதல் எப்படிப் படிப்படியாக நடக்கின்றதென்றும், அந்த வழியில் எங்கெல்லாம் நின்றுவிடுகிறோம், எங்கெல்லாம் தவறான பாதையைத் தேர்ந்தெடுத்து விடுகிறோம் என்பதைப் பார்ப்போம்.
எழுமின்1 விழுமின்1 இலட்சியத்தைத் தொட்டுவிட்டீர்.
ஒவ்வொரு வினாடியும் மக்கள் தொகை அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. உலகில் எத்தனை கோடி பேர் இருந்தாலும், அத்தனை பேருடைய லட்சியமும் ஞானமடைதல்தான். ஆனால் நீங்கள் எப்படித் தவறான திசையில் போகிறீர்கள் என்பதையும், அல்லது, ஞானமடைதல் என்ற லட்சியத்தை தேடியே போனாலும், எங்கெங்கு நின்று போகின்றீர்கள் என்பதையும் புரிந்துகொண்டால் போதும், லட்சியம் தெளிவாக இருந்தால் போதும். அதை நோக்கி நீங்கள் சென்று கொண்டேயிருப்பீர்கள்.
மிக அழகாக விவேகானந்தர் சொல்கிறார் எழுமின்!. விழுமின், குறிக்கோளை அடையும்வரை நில்லாது செய்மின் என்று'
Arise, awake. stop not till the goal is reached
அதாவது : எழுமின்! விழுமின்! உய்மின்!
அதாவது இந்த இலட்சியத்தை அடையும்வரை ஓயாதீர். அவ்வளவு கூட நீங்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை. என் இதயத்திலிருந்து பகிர்ந்து கொள்கிறேன்....

எழுமின், விழுமின் என்று விழித்து எழுந்தீர்களானாலும், சரி, விழித்தீர்களானாலும் சரி, அதுவே போதுமானது. உடனடியாகக் குறிக்கோளைச் சார்ந்துவிட்டீர்கள்.
Arise! Awake! Stop! The goal is reached
எழுமின், விழுமின் இலட்சியத்தைத தொட்டுவிட்டீர்.

விவேகானந்தர் கொல்கிறார்' stop not till the goal is reached என்று என் அனுபவத்திலிருந்து சொல்கிறேன். விழித்தீர்களானால் போதும். எழுந்தீர்களானால் போதும்.
இலட்சியத்தைப் பற்றிய தெளிவு அடைந்துவிடுவீர்கள். லட்சியத்தை அடைந்து கொண்டு இருக்கிறீர்கள். லட்சியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

இந்தப் பகுதியில் நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். லட்சியத்தைப் பற்றிய தெளிவை ஏற்படுத்திக் கொள்வது.
பின்பு ஏன் பல பேராலும் இந்த லட்சியத்தை அடைய முடிவதில்லை? காரணம், லட்சியம் என்ன? என்கின்ற தெளிவே இருப்பதில்லை. அதில்தான் பிரச்சினையே. லட்சியம் தெளிவோடு இருப்பவர்களுக்கு எளிமையான தியான முறைகளே போதுமானது கண்களை மூடி உணர்வை ஒன்றாக்கினீர்களானால் போதும். உடனடியாக லட்சியத்தை நோக்கி மலர ஆரம்பித்துவிடும்.

முதலில் லட்சியம் என்னவென்று நம்முடைய உணர்வுக்குள்ளே தெளிவாக இருந்தால் நம்முடைய உணர்வு ஒன்றுபடுகின்ற நேரங்களில் எல்லாம், அந்த லட்சியத்தை நோக்கியே நமது உணர்வு பொங்கிக் கொண்டிருக்கும்.
லட்சியத்தைப் பற்றி தெளிவும். அதை நோக்கியே பொருந்தியிருக்கின்ற உணர்வும்தான். ஜீவன் முக்தி என்று சொல்கின்றோம். அவ்வளவுதான்.

தெளிந்த லட்சியம் அதை நோக்கி ஒன்றாகி இருக்கின்ற உணர்வு. அதுதான் ஜீவன் முக்தி என்று சொல்கின்றோம். அப்படியென்றால், அடைய வேண்டியதை அடைந்து விட்டீர்கள். அடைவதற்கு என்று வேறு ஏதுவுமில்லைட அதாவது லட்சியத்தைப் பற்றிய தெளிவ நமக்கு வரவேண்டியதுதான் முக்கியம். லட்சியத்தைப் பற்றிய தெளிவு பிறந்தாலே ஜீவன் முக்கி தன்னால் பொங்கி வெளிப்பட ஆரம்பித்துவிடும். ------------------------------------------------------------------------------------

## *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு. மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

# அன்பின் தொனி - 615

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்**

கர்த்தரைத் துதியுங்கள்ளூ அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. தேவாதி தேவனைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள்ளூ அவர் கிருபை என்றுமுள்ளது. ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. வானங்களை ஞானமாய் உண்டாக்கினவ ரைத்துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. பெரிய சுடர்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது, பகலில் ஆளச்சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. இரவில் ஆளச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது, எகிப்தியருடைய தலைச்சன்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. அவர்கள் நடுவிலிருந்து இஸ்ரவேலைப் புறப்படப்பண்ணினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் அதைச் செய்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. அதின் நடுவே இஸ்ரவேலைக் கடந்துபோகப்பண்ணினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. பார்வோனையும் அவன் சேனைகளையும் சிவந்த சமுத்திரத்தில் கவிழ்த்துப்போட்டவரைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது.
**- சங்கீதம் 136: 1-15**

**பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள**

தம்முடைய ஜனங்களை வனாந்தரத்தில் நடத்தினவரைத் துதியுங்கள்ளூ அவர் கிருபை என்றுமுள்ளது. பெரிய ராஜா க்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்ளூ அவர் கிருபை என்றுமுள்ளது பிரபலமான ராஜாக்களை அழித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. எமோரியரின் ராஜாவாகிய சீகோனை அழித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. பாசானின் ராஜாவாகிய ஓகை அழித்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகத் தந்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. அதைத் தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகவே தந்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. நம்முடைய சத்துருக்களின் கையிலிருந்து நம்மை விடுதலைபண்ணினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. **- சங்கீதம் 136: 16-26**

**கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்**

உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன், தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன். உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன், உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர். நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர், என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர், கர்த்தாவே, பூமியின் ராஜாக்களெல்லாரும் உமது வாயின் வார்த்தைகளைக் கேட்கும்போது உம்மைத் துதிப்பார்கள். கர்த்தரின் மகிமை பெரிதாயிருப்பதினால், அவர்கள் கர்த்தரின் வழிகளைப் பாடுவார்கள். கர்த்தர் உயர்ந்த வராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார், மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார். நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர், என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர், உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும். கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார், கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது, உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.
**- சங்கீதம் 138: 1-8**

**தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள**

கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர், என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர், என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதை யெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. உம்முடைய ஆவிக்கு மறை வாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர், நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது, இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும், உமக்கு இருளும் வெளிச்சமும் சரி. நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர், என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன் உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண் டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறை வாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது, என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாத போதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள், அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். ஆவைகளை நான் எண்ணப்போனால், மணலைப்பார்க்கிலும் அதிகமாம், நான் விழிக்கும்போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன். தேவனே, நீர் துன்மார்க்கனை அழித்தீரானால் நலமாயிருக்கும், இரத்தப்பிரியரே, நீங்கள் என்னை விட்டு அகன்றுபோங்கள். **- சங்கீதம் 139: 1-19**

*தொடரும்...*



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 953



## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், கொழும்பு

**"கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே."**

கொழும்பு, கொச்சிக்கடையில் காணப்படும் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகள், எவ்வித இடையூறுமின்றி தனது சந்ததியினரால் நடத்தப்படவேண்டும் என, திரு. அருணாசலம் பொன்னம்பலமுதலியார் விரும்பினார். அதற்கேற்றமுறையில் அக்காலத்திலே நாத்தாண்டியா என்னும் இடத்தில், ஆயிரம் ஏக்கர் தென்னந்தோட்டத்தை வாங்கி, கோயிலுக்குத் தருமசாசனம் செய்து வைத்தார். அத்தோடு கொழும்பு மாநகரில் தொடர்கடைக-ளைக் கட்டி, அவற்றிலிருந்து கிடைக்கும் பணத்தின் மூலம், ஆலயத்தை சிறப்பாக நிருவகிக்க வகை செய்தார்.

யாத்திரை நிமித்தமாக இலங்கையிலும், இந்தியாவிலிருந்தும் கொழும்பை நாடிவரும் யாத்திரகர்கள் தங்குவதற்குச் சிரமப்பட்டனர். இதனைக் கருத்திற் கொண்ட முதலியார் அவர்கள், யாத்திரிகர்கள் எவ்வித சிரமமுமின்றித் தங்கும்வகையில், அன்னதான மடமொன்றைக் கட்டினார். அத்தோடு அமையாது மடத்திலே தங்குவோருக்குமட்டுமன்றி அங்குவரும் ஏழைகளுக்கும் உணவும், உடையும் அளித்தார். இவ்வாறான பணிகளோடு பல சமூகப்பணிகளையும் திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியார் அவர்கள் ஆற்றியுள்ளார்கள்.

அன்றுதொட்டு இன்றுவரை தமிழ் சமூகத்தை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் சீதனக் கொடுமையால், தமிழ்ப்பெண்களில் பலர் திருமணம் செய்து கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. ஏனைய சமூகங்களிலும் ஏழ்மை காரணமாக பெண்கள் திருமணம் செய்வதில் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. இவ்வாறான அனைத்து சமூத்தைச் சேர்ந்த திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு, தனது செலவிலே திருமணம் செய்து வைத்தார்.

இந்துக்கள் மரணமடைந்தால் பெரியவர்களாயின் அவர்களது உடலைத் தகனம் செய்து, புண்ணியதீர்த்தங்களிலோ, சமுத்திரங்களிலோ கரைத்தால் அவர்களது ஆன்மா ஈடேற்றம் காணும் என்ற நம்பிக்கை உள்ளது. அக்காலத்திலே கொழும்புப் பிரதேசத்திலே வாழ்ந்த இந்துக்கள் இறந்தால், அவர்களது பூதவுடலைத் தகனம் செய்வதற்குரிய மயானம் காணப்படவில்லை. இக்காரணத்தினால் உடல்களைப் புதைப்பது வழக்கமாகக் காணப்பட்டது. இந்நிலையைப் போக்க ஒரு காணியை விலைக்கு வாங்கி, பூதவுடல்களைத் தகனம் செய்வதற்குரிய மயானத்தையும், கிரியைகள் நடத்தவதற்குரிய மடத்தையும், திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியார் அவர்கள் கட்டுவித்தார்கள். இவ்வாறான கைங்கரியங்களினால் முதலியார் அவர்கள் இன்றுவரை அனைத்துச் சமூகங்களினாலும் நினைவுகூரப்படுகின்றார்.

இப்பெரியார் 1887 ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார். தாம் இறப்பதற்குமுன்னர் தன்னால் ஆரம்பித்து சிறப்பாக நடத்திவந்த சமூகப்பணிகளையும், ஆலயத்தையும் தொடர்ந்தும் சிறப்பாக நிர்வகிக்க, தனது சந்ததியில் வரும் மூத்த ஆண் வம்சத்திற்கு சட்டப்படியான அதிகாரத்தை வழங்கி சாசனமும் செய்து வைத்தார். இவரின் மறைவுக்குப் பின்னர் இவரது மூத்த மகனா-கிய திரு. பொன். குமாரசாமி அவர்கள், 1905 ஆம் ஆண்டுவரை, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை சிறப்பாக நிர்வகித்து வந்தார். இவர் காலமானபின்னர், திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியாருடைய இரண்டாவது மகனான, திரு. பொன். இராமநாதன் அவர்கள் தந்தைவழி நின்று கோயிலையும், தந்தையார் விட்டுச் சென்ற சமூகப் பணிகளையும் தொடர்ந்து பராமரித்து வந்தார்.

தந்தையார் கல்லும், சுண்ணாம்பும், செங்கற்களும் கொண்டு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலைக் கட்டியிருந்தார். இதனை மாற்றி கருங்கற் கோயிலாக இக்கோயிலைக் கட்ட, திரு. பொ. இராமநாதன் அவர்கள் முயற்சிகள் செய்ததோடு அமையாது, 1907 ஆம் ஆண்டு, கருங்கற்கோவிற்பணியை ஆரம்பித்தார். இக்கோயிலைக் கட்டுவதற்கான ஸ்தபதிகளும், சிற்பிகளும், தேர்ந்த கட்டிடக் கலைஞர்களும், இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டனர். ஆலயம் எழுப்புவதற்கான கருங்கற்களை, வியாங்கொடையிலிருந்து தருவித்தார். திரு. பொ. இராமநாதன் அவர்கள், சிவதோத்திரங்களை பண்ணுடன் பாட வல்லவராக விளங்கியுள்ளார்.

ஆலயத்திருப்பணிவேலைகள் நடைபெறும் வேளைகளில் அவ்விடத்திற்குச் சென்று, வேலைகளை நேரில் பார்வையிடுவது இவரது வழக்கம். சிற்பங்களை உருவாக்கும் சிற்பிகளுக்கு அருகிலே சென்று, பண்ணுடன் சிவதோத்திரங்களை பாடி, தெய்வீகமான சூழலை உருவாக்கும் வழக்கம் இவரிடம் காணப்பட்டது. இக்கோயிலில் அழகிய, கலைநுணுக்கம் வாய்ந்த தெய்வத்திருவுருவங்கள் வடிக்கப்பட, இவரது செயற்பாடுகளும் காரணமாக அமைந்தன. ஐந்து வருடங்களாக நடைபெற்ற கோயிற் திருப்பணி வேலைகள், 1912 ஆம் ஆண்டு நிறைவேறியது.

இதனைத் தொடர்ந்து 21.11.1912 ஆம் ஆண்டு, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் குடமுழுக்குப் பெருவிழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. இக்கோயில் திராவிட கட்டிடக்கலை சார்ந்ததாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய கணக்கின்படி இருபது லட்சத்திற்கும் மேல் செலவு செய்து பொன்னம்பலவாணேஸ்வரர் திருக்கோயில் கட்டப்பட்டது. தற்கால மதிப்பில் பல நூற்றுக்கணக்கான கோடிகளை இது எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் கொழும்பு மாநகரில், இவ்வாறான ஒரு திருக்கோயிலைக் கட்டுவதென்பது மிகவும் கடினமான காரியமாகும்.

*தொடரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS CR PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# இவ்வார ராசிபலன்

**02-07-2021 வெள்ளி தொடக்கம் 08-07-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** பணிவான பேச்சுக்களால் பணவரவை சேர்த்துக் கொள்ளக்கூடிய வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 1,8,2,5*
*அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* N,S




**ரிஷபம்:** தேவைகள் பூர்த்தியாகி ஆசைகள் நிறைவேறும் அற்புத வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: பிரம்மசக்தி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5*
*அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* F,M




**மிதுனம்:** வாட்டி வதைத்த வருத்தங்கள் வக்கனையாய் விலகக்கூடிய நல்ல வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத் தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். புகழ் கூடும். அந்தஸ்து உயரும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0*
*அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* Y,D




**கடகம்:** கடைத்தெடுத்த கவலைகள் காணாமல் போகக்கூடிய நல்ல வாரம். முகப் பொலிவு கூடும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,4,5,2*
*அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* F,N




**சிம்மம்:** மெல்லிய ஆசைகள் கண்ணியத்தோடு நிறைவேறக்கூடிய அற்புதமான வாரம். தனவரவு பெருகும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: மருதகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,6*
*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* D,S




**கன்னி:** ஆரோக்கியத்தில் திருப்தி கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். உற்சாகம் அலை மோதும். பணக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றம் தெளிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: கைலாசநாதப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,0,7,1*
*அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* U,L




**துலாம்:** ஆலய தரிசனத்தால் ஆத்ம பலம் பெருகக்கூடிய அற்புதமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத் தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: உச்சிபிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,5,3,0*
*அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* R,A




**விருச்சிகம்:** அறியாத அதிர்ஷ்டங்களை அறிந்துக் கொள்ளக்கூடிய அற்புதமான வாரம். விரக்திகள் மறையும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும்.
*வழிபடவேண்டியதெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,1,7,6*
*அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* F,Y




**தனுசு:** இல்லத்திலும் மற்றவர் உள்ளத்திலும் மதிப்பு உயரக்கூடிய மகத்தான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,1,7,8*
*அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* L,J




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** விருப்பங்கள் நிறைவேறி திருப்பங்கள் நடக்கக்கூடிய வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
*வழிபடவேண்டிய தெய்வம்: தேவிசெல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 9,4,0,7*
*அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* F,R




**கும்பம்:** சங்கடங்கள் விலகி சந்தோஷம் மிகுதியாகக் கூடிய நல்ல வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும்.பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0*
*அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* F,K




**மீனம்:** பூமியும் நிலமும் வாங்கக்கூடிய மேன்மையான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
*வழிபடவேண்டிய தெய்வம்: வடிவுடைஅம்மன், அதிர்ஷ்ட எண்: 5*
*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* O,M

----------------------------------------




# மரண அறிவித்தல்



பிறப்பு 19 - 06 - 1944

இறப்பு 30 - 06 - 2021

## அமரர் பெரியதம்பி சிவக்கொழுந்து

**நெடுந்தீவை பூர்வீகமாகவும் வேலணையை பிறப்பிடமாகவும், இல 24,D-8 உருத்திரபுரம் கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் மொன்றியல் கனடாவில் வாழ்ந்து வந்தவருமான பெரியதம்பி சிவக்கொழுந்து 30-06-2021 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்ற இராமநாதர் பெரியதம்பி, பெரியதம்பி தங்கம்மாவின் அன்பு மகனும், கதிர்காமு அன்னம்மா ஆகியோரின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பூமணி, இரத்தினம், மகாதேவன், இராசமணி, புனிதவதி ஆகியோரின் சகோதரரும், கதிர்காமநாதன் (சிறி, Rajan Business, London) கணேசமூர்த்தி (சீயோ - Marche Murugan), செல்வராசா (செல்வா, Marche Murugan), செந்தில்தாசன் (செந்தி Real Estate Broker, Les Amis), விஜயசாமுண்டீஸ்வரி (விஜயா), கேதீஸ்வரன் (கேதீஸ், Building Engineer + Real Estate Broker), சிவனேஸ்வரன் (சிவா, Computer Engineer IBM, Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவஜோதி, சொர்ணலதா, சுஜித்தா, சுமித்திரா, மயூரதன் (Marche Murugan), கோதினி, மயூகரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மிரா, ரினி, ஜகீசன், ஜோன்சன், கிறிஸ்ரினா, விதுயா, வினுயன், சிவயன், மயூரா, செந்துயன், வினுயா, சுயன், மயூயன், சிறியன், கேதுயன், கரித், கேதுயா, செந்துயா, சுயா, கசிஸ்னி, மயூயா, ஆகியோரின் ஆசைத் தாத்தாவும் ஆவார்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

பார்வைக்கு : சனி (July 3, 2021) 3.00 p.m - 9.00 p.m.
ஞாயிறு (July 4, 2021) 9.00 a.m - 11.00 a.m
கிரியை : ஞாயிறு (July 4, 2021) 12.00 p.m - 1.00 p.m

இடம்: AETERNA Funeral Complex
55 Rue Gince, Montreal, QC, H4N 1J7.

தொடர்புகளுக்கு:
சிறி (மகன்) - 44 77 78 60 0009
சீயோ (மகன்) - 514 - 246 - 1743
செல்வா (மகன்) - 514 - 928 - 4545
செந்தி (மகன்) - 514 - 991 - 8141
விஜயா (மகள்) - 514 - 999 - 1959
கேதீஸ் (மகன்) - 514 - 961 - 8141
சிவா (மகன்) - 416 - 805 - 0651
ரதன் (மருமகன்) - 514 234 - 1743












25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

உதயம் 1317 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 2, 2021




# கனடாவின் பழங்குடி பிள்ளைகள் விவகாரத்தால் ரைசன் பல்கலைக் கழகம் நன்கொடையாளர்களை இழந்துள்ளது

தற்போது கனடாவில் முக்கிய விடயமாக பேசப்பட்டும் விமர்சிக்கப்பட்டும் வரும் கனடாவின் பழங்குடி பிள்ளைகள் தங்கவைக்கப்பட்ட பாடசாலைகளில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான விவகாரத்தால் ரொறன்ரோவின் பிரபல ரைசன் பல்கலைக் கழகம் பல நன்கொடையாளர்களை இழக்கும் நிலை தோன்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ரைசன் பல்கலைக் கழகத்தில் உள்ள பல துறைகளில் கட்டடக் கலைப் பீடம் மிகவும் உயர்ந்த தரத்தைக் கொண்டதாகும்.


*(தொடர்ச்சி, உள்ளே 2ம் பக்கத்தில்)*

# மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் படைத்த நாவன்மைக் களம்:

## ரொறன்ரோவையும் – கோலாலம்பூரையும் இணைத்த கனடா உதயன் இதழ்


உலகின் மூத்த மொழியாம் அன்னைத் தமிழை தாய்மொழியாகக் கொண்ட தொல்குடி என பெயர்பெற்ற தமிழர்கள் புலம் புலம் பெயர்ந்து வாழும் கோலாலம்பூர் திருநகரையும் டொரொண்டோ பெருநகரையும் இணைக்கும் விதமாக மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவச் செல்வங்கள் பங்கு பற்றிய 'நாவன்மைக் களம்' என்னும் நிகழ்ச்சியை கனடாவில் முதல் தர இணைய ஏடாகவும் ஈழத் தாயின் இதயத் துடிப்பைப் பிரதிபலிக்கும் வாரப் பத்திரிகையாகவும் ஒருசேர உலா வருகின்ற உதயன் இதழ் ஜூன் 27 ஞாயிறுக் கிழமை 7:00 மணியளவில் நடத்தியது.

*(தொடர்ச்சி, உள்ளே 19ம் பக்கத்தில்)*






# மொன்றியால் மாநகர "மார்சே முருகன்" தமிழர் வர்த்தக நிறுவனத்தின் உரிமையாளர்கள் குடும்பத்தின் தந்தை காலமானார்



மொன்றியாலில் நன்கு அறியப்பெற்ற வீடு விற்பனை முகவர்களாக செந்தில்தாசன் (செந்தி) மற்றும் கேதீஸ்வரன் (கேதீஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமான பெரியதம்பி சிவக்கொழுந்து அவர்கள் நேற்று பதன்கிழமை மொன்றியாலில் இறைபதமடைந்தார்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரோடும் எமது ஆழந்த இரங்கலைப் பகிர்ந்து கொள்கின்றோம்.- கனடா உதயன் பத்திரிகை நிறுவனம்.


உள்ளே விபரமான அறிவித்தல் காணப்படுகின்றது.

# கனடா தமிழ்க் கவிஞர் கழகம் நடத்தும் இணையவழி சஞ்சிகை வெளியீடும் விருது வழங்கும் விழாவும்

கனடாவில் நீண்ட காலமாக வெற்றிகரமாக இயங்கிவரும் "கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்" எதிர்வரும் 10-07-2021 சனிக்கிழமை இணையவழியாக நடத்தும் சஞ்சிகை வெளியீடும் விருது வழங்கும் விழாவும் என்ற சிறப்பு நிகழ்ச்சியில் கனடாவில் கவிதைத் துறையில் நீண்ட காலம் ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் பங்காற்றி வரும் மூவருக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. கவிஞர்கள் திருவாளர்கள் வி. கந்தவனம் (கவிநாயகர்) அருள் சுப்பிரமணியம், மற்றும் தீவகம் இராசலிங்கம் ஆகியோரே மேற்படி விருதுகளைப் பெறவுள்ள சாதனையாளர்கள் ஆவார்கள்.




# கோவிட் – 19 மூன்றாவது அலையில் சிக்கி இலங்கை அதற்குள் மூழ்கும் நிலை ஏற்பட்டால் தீர்வு என்ன?



உலகில் சற்று ஓய்ந்துள்ள கொவிட் 19 தொற்றின் வேகமான பரவல் அந்தந்த நாடுகளை சற்று சாந்தப்படுத்தினாலும், தற்போது இந்த தொற்றின் மூன்றாவது அலையானது முன்பை விடவும் இலங்கையில் வேகமாகப் பரவக் கூடியதாக உள்ளது என இலங்கையின் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களும் தெரிவித்துள்ளார்கள்.

இந்த தொற்று அதிகரிப்பிற்கு உள்ளானவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்கள் வைத்தியசாலைகளிலும், இடைநிலை சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மருத்துவ பராமரிப்பு அளிக்கப்படுகின்றனர்.

(தொடர்ச்சி, ***www.uthayannews.ca*** என்னும் எமது இணையத்தளத்தில்)







உங்கள் அபிமானத்திற்குரிய உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் எதிர்வரும் 06-08-2021 வெள்ளிக்கிழமை வெளிவருகின்றது.

தமிழ் பேசும் நல்லுலக நாடுகளிலிருந்து சிறப்புக் கட்டுரைகள், இலக்கியப் படைப்புக்கள் வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றோடும் அதிக பக்கங்களோடும் வாசகர்களையும் வர்த்தக அன்பர்களையும் எழுத்தாள நண்பர்களையும் மகிழ்விக்க வருகின்றது 'உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழ்." இந்த சிறப்பிதழில் தங்கள் படைப்புக்கள் இடம்பெற விரும்பும் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களை அனுப்பலாம். மேலும் தங்கள் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரித்து எமக்கு ஆதரவளிக்கவும் வாழ்த்தவும் விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ளவும்- 416 732 1608 அல்லது 416 752 1524